# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 சித்திரை 26 திங்கட்கிழமை (08-05-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:139

# ஈழ அகதிகள் வருகையால் இந்தியாவுக்கு நெருக்கடி!

## இராமேஸ்வரத்தில் நாளை மாநாடு

புதுடில்லி,மே8

**இலங்கையிலிருந்து தமிழ்நாடு செல்லும் ஈழ அகதிகளின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து வருவது இந்தியாவுக்கு நெருக்கடியை உருவாக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.**

**இதுதொடர்பாக ஆராய இராமேஸ்வரத்தில் நாளை உயர் மட்ட மாநாடு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.**

இலங்கையில் கடந்தவாரங்களில் போர் தீவிரம் அடைந்ததை அடுத்து இராமேஸ்வரத்துக்கு அகதிகள் வருகை அதிகரித்துள்ளது. நேற்று வரை 220 அகதிகள் வந்து சேர்ந்துள்ளனர் என கடற்படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அகதிகள் வருகை குறித்தும் அவர்களுக்கு அளிக்கவேண்டிய வசதிகள் குறித்தும் மாநில அரசிடமிருந்து தெளிவான ஆணை எதுவும் கிடைக்கவில்லை என்றும் இது விடயமாக மாவட்ட ஆணையர் தலைமையில் நாளை நடைபெறும் மாநாட்டில் ஆராயப்படும் என்றும் மேலும் அவர் தெரிவித்தார்.

இந்தியாவில் ஏற்கனவே ஒரு லட்சம் அகதிகள் உள்ளனர். மேலும் அகதிகள் வந்தால் என்ன செய்யமுடியும் என்றும் அரசு சிந்திப்பதாக கூறப்பட்டது. (இ-க-3-4)




## இந்திய விமானப் படைத்தளபதி நேற்று இலங்கை வருகை

கொழும்பு,மே8

இந்திய விமானப் படைத் தளபதி ஏயர் மார்ஷல் ஏ.வை. டிப்னிஷ் ஆறுநாள் விஜயத்தை மேற்கொண்டு நேற்று கொழும்பு வந்துள்ளார்.

யாழ். குடாநாட்டில் சிக்குண்ட படையினரை வெளியேற்ற உதவி வழங்குமாறு இந்தியாவிடம் இலங்கை கோரிக்கை விடுவதற்கு முன்னரே - அதாவது கடந்த வருடமே - இவரின் இலங்கை விஜயம் குறித்து ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

எனினும் - இவர் தமது விஜயத்தின்போது இந்தியாவிடம் இலங்கை எதிர்பார்க்கும் உதவி குறித்தும் ஆராய்வார் எனத் தெரிவிக்கப்பட்டது.

விமானப்படைத் தலைமையகத்தில் இன்று காலை 9.00 மணிக்கு விசேட அணிவகுப்பை ஏற்கவிருக்கும் இவர் பிரதிப் பாதுகாப்பு அமைச்

(10ஆம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்சினைக்குத் தீர்வு

# இலங்கை கோரிக்கை விடுத்தால் இந்தியா மத்தியஸ்தம் வகிக்கும்

### ஜஸ்வந்சிங் அறிவிப்பு



புதுடில்லி,மே8

இலங்கை அரசாங்கம் கோரிக்கை விடும் பட்சத்தில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான முயற்சியில் இந்தியா மத்தியஸ்தம் வகிப்பது குறித்து பரிசீலிக்கும் என்று இந்தியவெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்சிங் நேற்றிரவு தெரிவித்தார்.

இந்திய தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இத்தகவலை வெளியிட்டார்.

இலங்கையில் உருவாகியுள்ள நெருக்கடி நிலைமை குறித்து உன்னிப்பாக இந்தியா அவதானித்துக் கொண்டிருக்கின்றது என்றும் -

(10ஆம் பக்கம் பார்க்க)

# தாக்குதல்களை முறியடிக்க படையினர் உஷார் நிலையில்!

## புலிகளின் நிலைகள் மீது விமானத் தாக்குதல்கள்

கொழும்பு,மே8

யாழ். குடாநாட்டில் விடுதலைப் புலிகளின் தாக்குதல்களை முறியடிக்கும் வகையில் படையினர் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

யாழ். குடாநாட்டில் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட பகுதிகளை மீட்பதற்காக அவர்களின் நிலைகள் மீது விமானப்படையினர் விமானத் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் -

விடுதலைப் புலிகள் படையினரின் நிலைகள் மீது பீரங்கித் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர் என்றும் -

பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

படையினர் தமது நிலைகளைத் தொடர்ந்து பலப்படுத்தி வருகின்றனர் என்றும் -

முன்னணி நிலைகளுக்கு முன்னால் சிறுசிறு குழுக்களாகப் பிரிந்து தாக்குதல்களையும், ரோந்தையும் படையினர் மேற்கொண்டுள்ளனர் என்றும் - அது மேலும் தெரிவித்தது.

யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது என்றும் -

அவற்றை முறியடிக்கப் படையினர் தாக்குதல் நடத்தி வருகின்றனர் என்றும் - விசேட ஊடக தகவல் நிலையம் அறிவித்துள்ளது. (இ-க-3-4)

## பாக்கு நீரிணைப் பகுதியில் பாதுகாப்பு அதிகரிப்பு

### கொமாண்டோக்கள் ரோந்து

சென்னை,மே8

இலங்கையில் இராணுவத்தினருக்கும்,விடுதலைப்புலிகளுக்கும் இடையில் யுத்தம் தீவிரமடைந்துள்ளதையடுத்து இந்திய எல்லைப்பகுதியில் பாக்குநீரிணைப்பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக இந்திய கடற்படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தக் காவல் பணியில் விசேட பயிற்சி பெற்ற கடலோரப் படையைச்சேர்ந்த நூறு கொமாண்டோக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அதி நவீன ஆயுதங்களுடன் அவர்கள் பணியாற்றுகின்றனர்.

வட இலங்கையில் போர் தீவிரமடைந்துள்ளதால் விடுதலைப்புலிகள் தமிழகத்துக்குள் ஊடுருவ சாத்தியம் உள்ளது. இதன் காரணமாகவே பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது - இப்படி அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (இ-க-3-4-5)

## வாகரையில் ஷெல் வீச்சு

மட்டக்களப்பு,மே8

மட்டக்களப்பு மாவட்டம் - வாகரைப் பகுதியில் உள்ள வீடு ஒன்றின் மீது நேற்றுக்காலை ஷெல் ஒன்று வீழ்ந்து வெடித்ததில் குடும்பப் பெண் ஒருவர் படுகாயமடைந்தார்.

நல்லதம்பிரான் சோதிமலர் (வயது 46) என்பவரே படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-7)

## இராமேஸ்வரம் வந்த அகதிகளில் குழந்தை ஒன்று நோயால் மரணம்!

சென்னை,மே8

தலைமன்னாரில் இருந்து நேற்றுக்காலை இராமேஸ்வரம் வந்து சேர்ந்த 27 அகதிகளில் சுகயீனமடைந்த குழந்தை ஒன்று உயிரிழந்தது என்று இராமேஸ்வரம் அரச அதிகாரிகள் தெரிவித்தனர்.

படகு மூலம் அழைத்துவரப்பட்ட இவர்கள் வெள்ளிக்கிழமை இரவு தனுஷ்கோடிக்கு அருகில் மணல்திட்டு என்னும் இடத்தில் இறக்கப்பட்டனர் என்றும் -

கரையோரக் காவல்துறையினர் இவர்களை நேற்றுக்காலை தனுஷ்கோடிக்கு அழைத்து வந்தனர் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

சுகயீனமடைந்திருந்த குழந்தை அங்குள்ள ஆஸ்பத்திரி ஒன்றில் அனுமதிக்கப்பட்டு அங்கு இறந்தது என்றும் கூறப்பட்டது.

வன்னியிலிருந்து மன்னார் சென்று அங்கிருந்து படகுகள் மூலம் தாம் தமிழகம் வந்ததாகவும் -

உணவுத்தட்டுப்பாடு, பாதுகாப்பின்மை ஆகிய காரணங்களினால் தாம் இடம்பெயர்ந்ததாகவும் - அகதிகள் தெரிவித்துள்ளனர்.(இ-க-3-4)

## கிளைமோரில் சிக்கி கான்ஸ்டபிள் பலி

வவுனியா,மே8

வவுனியா மாவட்டத்தில் செட்டிக்குளம் சோதனை நிலையத்துக்கு அருகில் பணியில் இருந்த பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கிளைமோர் கண்ணியில் சிக்கி உயிரிழந்தார்; மற்றுமொருவர் காயமடைந்தார்.

இதே நேரம் - ஓமந்தைப் பகுதியில் படையினர் மேற்கொண்ட சினைப்பர் தாக்குதலில் விடுதலைப் புலி உறுப்பினர்கள் இருவர் உயிரிழந்தனர் என்று பாதுகாப்பு தரப்பு கூறுகின்றது. (இ-3-4)

## கிழக்கிலுள்ள சில முகாம்கள் மூடப்பட்டு படைகள் வடக்குக்கு

கொழும்பு,மே8

கிழக்கில் மூடப்படும் முகாம்களில் பணிபுரிந்த படையினர் குடாநாட்டில் பணிபுரிவதற்காக அனுப்பப்பட்டு வருகின்றனர் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பாலித பெர்னாண்டோ தெரிவித்தார்.

கிழக்கில் உள்ள பல படைமுகாம்கள் மூடப்பட்டுள்ளதற்கான காரணத்தை அவரிடம் கேட்கப்பட்ட சமயமே அவர் இப்படிக் கூறினார்.

"யாழ்ப்பாணத்தை மீட்கும் நடவடிக்கை தொடர்ந்து இடம்பெறுகின்றன. அதற்காகவே கிழக்கில் உள்ள சில முகாம்கள் மூடப்பட்டு படையினர் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்படுகின்றனர்" என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

## சிக்குண்ட படையினரை மீட்க ரஷ்யாவும் உதவி வழங்குமாம்

### கொழும்பில் அரச தரப்பு தெரிவிப்பு

கொழும்பு,மே8

யாழ். குடாநாட்டில் சிக்குண்டுள்ள படையினரை மீட்க தேவையான உதவிகளை வழங்க ரஷ்யாவும் முன்வந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குடாநாட்டில் சிக்கியுள்ள படையினரை மீட்கவும் -

விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தைத் தீவிரமாக்கவும்- அரசு பல நாடுகளிலும் உதவிகளைக் கோரியிருந்தது.

ரஷ்யாவும் உதவி வழங்க முன்

(10ஆம் பக்கம் பார்க்க)

# நாய்களுக்கு தடுப்பூசி

யாழ்ப்பாணம்,மே8

யாழ். மாநகரசபை எல்லைக் குட்பட்ட பகுதிகளில் உள்ள வீட்டு வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி போடும் நடவடிக்கைகள் யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினால் கடந்த மாதம் 24ஆம் திகதி தொடக்கம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன்படி இன்று திங்கட்கிழமை தொடக்கம் புதன்கிழமை வரையும் தடுப்பூசிபோடும் நிலையங்களின் விவரங்கள் வருமாறு:-

* இன்று திங்கள் காலை 8.30 மணி தொடக்கம் 12.30 மணிவரை கற்குளம் சனசமூக நிலையம், பிற்பகல் 2.00 மணி தொடக்கம் 4.30 மணிவரையும் சென். செபஸ்தியன் சனசமூக நிலையம்.

* செவ்வாய் காலை 8.30 மணி தொடக்கம் 12.30 மணிவரையும் பாஷையூர் சென்.அன்ரனீஸ் சனசமூக நிலையம், பிற்பகல் 2.00 மணி தொடக்கம் 4.30 மணிவரை அரியாலை கலைவாணி சனசமூக நிலையம்.

* புதன் காலை 8.30 மணி தொடக்கம் 2.00 மணிவரையும் நாவலர் வீதி கிராமசேவையாளர் பணிமனை, பிற்பகல் 2.00 மணி தொடக்கம் 4.30 மணிவரையும் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம்.

மற்றைய தடுப்பூசி போடும் நிலையங்கள் பற்றிய விவரங்கள் பின்னர் உதயனில் வெளியாகும்.

# வெளிநாட்டுத் தூதர்களைச் சந்தித்து அமைச்சர் உதவி கோருகிறார்

கொழும்பு,மே8

தற்போதுள்ள யுத்த சூழ்நிலையைக் காரணம் காட்டி, இலங்கைக்குத் தேவையான உதவிகளை வழங்குமாறு பிரதி வெளிநாட்டு அமைச்சர் லக்ஷமன் கிரியெல்ல கொழும்பில் உள்ள வெளிநாட்டு தூதரகங்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

தூதரகங்களுக்கு நேரில்சென்று தூதுவர்களைச் சந்தித்து இக்கோரிக்கையை அவர் விடுத்துவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதுவரையும் இருபது வெளிநாட்டுத் தூதரகங்களுக்கும் சென்று அவர் இந்தக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக பிரதி அமைச்சர் லக்ஷமன் கிரியெல்ல கருத்து வெளியிடுகையில் கூறியதாவது:-

தற்பொழுது இஸ்ரேல் அரசுடன் நாம் பேச்சுக்களை நடத்த தீர்மானித்துள்ளோம். இஸ்ரேலுடன் தொடர்பு வைத்திருந்தால் எமக்குப் பிரச்சினை வரும் என்று சிலர் அஞ்சுகின்றனர்.

அரபு நாடுகளின் தூதுவர்களுடன் நாம் தனித்தனியே பேச்சு நடத்தியுள்ளோம். அவர்கள் எமக்கு உதவி செய்வார்கள்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வெளிநாடுகளுடன் வைத்திருந்த சிநேகபூர்வ உறவு முறையே பல நாடுகள் எமக்கு உதவ முன்வந்தமைக்கான காரணமாகும் -- இப்படி அவர் கூறினார்.

# கொக்குவில் கிழக்கில் திருட்டு

சமையலறை யன்னல் கம்பியை வளைத்து வீட்டினுள் நுழைந்த திருடர்கள் அங்கிருந்து சுமார் 8பவுண் பெறுமதியான நகைகள் மற்றும் உயர்ரக சேலைகள் என்பவற்றைத் திருடிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் கொக்குவில் கிழக்கு மணியகாரர் வீதியில் கடந்த வியாழக்கிழமை இரவு இடம்பெற்றது.

ஒரு சிறுவன் மட்டும் நுழையக் கூடிய அளவுக்கு ஒரே ஒரு யன்னல் கம்பி மட்டும் வளைக்கப்பட்டிருந்தது. சாமி அறையினுள்ளே மின்குமிழை எரிய விட்டுவிட்டு உள்ளே இருந்த சகல பொருள்களையும் கிளறி ஆராய்ந்து அங்கிருந்த விலை கூடிய சேலைகளை மட்டுமே எடுத்துக் கொண்டதுடன் நகைகள், ஆவணங்கள் அடங்கிய பைகள் போன்றவற்றை சமையலறைக்கு அருகிலிருக்கும் அறைக்கு எடுத்துச்சென்று அங்கு வைத்து அவற்றை ஆராய்ந்து நகைகளை எடுத்துக் கொண்டு தலைமறைவாகியுள்ளனர்.

(இ-69)

# காரைநகரில் தேடுதல்

சனியன்று அதிகாலை முதல் காரைநகர் பகுதி கடற்படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

அப்பகுதி மக்களைப் பாடசாலைகளில் ஒன்றுகூடுமாறு ஒலிபெருக்கி மூலம் அறிவித்த கடற்படையினர் அங்கு வைத்து அடையாள அட்டைகளைப் பரிசோதித்த பின்னர் மக்களை வீடு செல்ல அனுமதித்தனர்.

இந்தச் சுற்றிவளைப்பினால் அன்று நண்பகல் 12.00 மணிவரை காரைநகருக்கும் பிறஇடங்களுக்குமான போக்குவரத்துக்கள் தடைப்பட்டிருந்தன. காரைநகரிலிருந்து எவரும் வெளியிடங்களுக்குச் செல்லவோ அல்லது வெளியிடங்களிலிருந்து காரைநகருக்கு வரவோ அனுமதிக்கப்படவில்லை.

யாழ். மத்திய பேருந்து நிலையத்திலிருந்து காலை முதல் காரைநகருக்குச் சென்ற நான்கு பஸ்களும் மூளாயுடனே திரும்பிச் சென்றன. இந்த பஸ்களில் பயணம் செய்த நூறுக்கு மேற்பட்ட பொது மக்களும் அரச ஊழியர்களும் காரைநகருக்குச் செல்வதற்காக 12.00 மணிவரை மூளாயில் காத்திருந்தனர். (இ-73)

## அல்வாயில் தேடுதல்

அல்வாய் வடக்குப் பகுதி சனியன்று அதிகாலை படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

அல்வாய் முத்துமாரி அம்பாள் கோவிலுக்கு அனைவரும் அழைத்துச் செல்லப்பட்டு விசாரணையின் பின் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டனர். (இ-109)

## உயிரிழப்பு

தொடரும் ஓயாத அலைகள்-3 தாக்குதலின்போது தமது தரப்பில் மேலும் இருவர் உயிரிழந்துள்ளனர் என்று புலிகளின் குரல் அறிவித்துள்ளது.

* சிவாசினி அல்லது சுரேந்தினி (உ.பநமசிவாயமுதலியார் குகலட்சுமி - யாழ்ப்பாணம்)

* எல்லைப்படை வீரர் ரமேஸ் (ரங்கசாமி ரமேஸ்குமார் - யாழ்ப்பாணம்) ஆகியோரே இந்த இருவரும் ஆவர்.

அதேவேளை கடந்த 30ஆம் திகதி இடம்பெற்ற மோதலில் நாட்டுப்பற்றாளரான கமலேஸ் செபஸ்ரியாம்பிள்ளை (புதுக்குடியிருப்பு) என்பவரும் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-4-5)

## பரிசளிப்பு வைபவம் இன்று

அகில உலக செஞ்சிலுவைத் தினத்தை முன்னிட்டு கடந்த இரண்டாம் திகதி இலங்கைச் செஞ்சிலுவைச்சங்க யாழ். கிளைத் தலைமையகத்தினால் நடத்தப்பட்ட செஞ்சிலுவைச்சங்க பொது அறிவுப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இருபாலையில் அமைந்துள்ள இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க ஆரம்ப சுகாதார கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களின் விவரம் முறையே வருமாறு:-

மு.விவேகானந்தன் - சாவகச்சேரி வீரசிங்கம் மகா வித்தியாலயம், ம.மயூரனி - சாவகச்சேரி இந்துக் கல்லூரி, த.பிரபாகரன் - சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி.

இவர்களுடன் மேலும் எட்டு பாடசாலை மாணவர்களுக்கு ஆறுதல் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

## மட்டக்களப்பில் ரெலோ உறுப்பினர் நால்வர் கைது

ரெலோ இயக்கத்தைச் சேர்ந்த நால்வர் ஏறாவூர் பொலீஸாரினால் கைதுசெய்யப்பட்டுக் கடந்த வியாழனன்று மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

செங்கலடியைச் சேர்ந்த ரெலோ உறுப்பினரான அரசரத்தினம் சசிகுமார் (வயது 24) என்பவர் செய்த முறைப்பாட்டை அடுத்தே நால்வரும் கைதுசெய்யப்பட்டனர்.

மாவட்ட நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட ந.சுந்தரலிங்கம், நா.தினகரன், மு.விஜயகுமார், நா.அரசரத்தினம் ஆகிய நால்வரையும் இம்மாதம் 19ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் தே.விஸ்வநாதன் உத்தரவிட்டுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் சசிகுமார் என்பவர் குறிப்பிட்ட நால்வரும் தன்னைக் கடத்திச் சென்று தாக்கியதுடன் சித்திரவதை செய்ததாகவும் முறைப்பாடு செய்திருப்பதாக ஏறாவூர் பொலீஸார் கூறினர்.


**ராஜா**
யாழ்ப்பாணம்.
கடைசி வாரம்
அஜித், ஷாலினி
நடிப்பில்
**அமர்க்களம்**
12-05-2000 முதல்
**லவ் டூடே**
காட்சிகள் 10.30, 2.30
(C/12072)

**நாகம்ஸ்**
சுன்னாகம்.
விஜய், ஷாலினி
நடித்த
**கண்ணுக்குள் நிலவு**
(ரீலீஸ்)
காட்சிகள் 11.00, 2.30
(புதிய நேரம்)
(76077)

**லிபேட்டி**
அச்சுவேலி.
இன்று முதல்
விஜயகாந், தேவயாணி,
ரகுவரன், வடிவேலு
நடிப்பில்
**வல்லரசு**
(புதிய வெளியீடு)
காட்சிகள் :10.30, 2.30
T.P- 070-212223
- 070-212678
FAX. No. 0094 - 70212223
(75999)


உ

## உசன் கந்தசாமி கோயில் வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம்

**உசன் கந்தசாமி கோயில் வருடாந்த மஹோற்சவம் இன்று (08-05-2000) திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தேர், தீர்த்த உற்சவத்துடன் இனிது நிறைவெய்துமென்பதை முருகன் அடியார்களுக்கு அறியத்தருகிறோம்.**

- தர்மகர்த்தா,
*உசன் கந்தசாமி கோயில்.*

(76081)

உ

## மாவை கொல்லங்கலட்டி அருள்மிகு ஸ்ரீவீரகத்தி விநாயகர் தேவஸ்தானம் மகோற்சவப் பெருவிழா

**09-05-2000 செவ்வாய்க்கிழமை கொடியேற்றத் திருவிழாவுக்கு புதிய நேரம் 9.00 மணி தொடக்கம் பஸ் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. தெல்லிப்பழை தடை/முகா/முக்கு வரவும்.**

**ஏனைய நாள்களில் காலை 9.00 மணிக்கும் 10.00 மணிக்கும் பஸ் புறப்படும். பூசை முடிந்ததும் திரும்பி வரமுடியும்.**

– *அறங்காவலர்.*

(76088)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை நூலக அபிவிருத்தி உத்தியோகத்தராகிய

**திருமதி வாசுகி தயானந்தன அவர்களின்**

அன்பு மாமியார்

### திருமதி நிற்சிங்கம் வள்ளிநாயகி

**அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

*அதிபர், ஆசிரியர்கள்,*
*யா/சிறுப்பிட்டி அ.த.க.பாடசாலை,*
*நீர்வேலி.*
(76039)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
1928 - 08 - 18



மறைவு
2000 - 04 - 08

அமரர் சுந்தரம் பரமானந்தம்
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

**அன்புத் தந்தையே !**
**ஆறாத காயத்தினை – எம்**
**அகத்திலே தந்துவிட்டு – நீர்**
**அமைதியாக உறங்கியதேன்....?**
**அடி மனதில் நிலைத்திருக்கும் – உம்**
**அழகான நினைவுகள் – என்றும்**
**எம் உயிரோடு.**

**இன்று (08-05-2000) திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

*உங்கள், பிரிவால் துயருறும்*
*மனைவி, பிள்ளைகள்,*
*பேரப்பிள்ளை, மருமக்கள்.*

*மிருசுவில் வடக்கு,*
*மிருசுவில்.*
(76082)

## 31ஆம் நாள் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் நன்றி நவிலலும்

பிறப்பு
07 - 02 - 1939



இறப்பு
11 - 04 - 2000

### அமரர் கந்தையா அம்பலம்

**10-04-2000ஆம் திகதி மலேஷியாவில் சிவபதமடைந்த எனது அன்புச் சகோதரரின் மரணச் செய்தியை அறிந்து வந்து துன்பத்தில் கலந்து கொண்ட ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர், நிர்வாக உத்தியோகத்தர், நிதி உதவியாளர் மற்றும் அலுவலக சகல உத்தியோகத்தர்கள், வெளிக்கள உத்தியோகத்தர்கள், சமுர்த்தி வங்கி முகாமையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், காரைநகர் மத்திப்பிரிவு, தெற்குப் பிரிவு அனைத்துக் குடியிருப்பாளர்கள், அயலவர்கள் மற்றும் மூளாய், சுழிபுரம், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலிருந்து வந்து கலந்து கொண்டவர்களுக்கும் இறுதி அஞ்சலிக்காக மலேஷியா சென்று கலந்து கொண்டவர்களுக்கும் சொய்ஸாபுர, மொரட்டுவ இல்லத்துக்கு தொலை பேசி மூலமும் நேரடியாகவும் சென்று கலந்துகொண்டவர்களுக்கும் இதய அஞ்சலி வெளியீடு செய்த கொழும்பு சமூக முன்னேற்றக்கழகங்களின் சமாசம், புனர்வாழ்வு, கல்வி அபிவிருத்தி நிதியத்தினர், சைவச்சிறுவர் இல்லம், இந்து சமயப் பேரவை, கைதடி, யாழ்ப்பாணம் முதலான எல்லா அன்புள்ளங்களுக்கும் எமது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.**

**10-05-2000ஆம் திகதி புதன்கிழமையன்று கோலாலம்பூர் பத்துமலை முருகன் நிழல் பதியில் அந்தியேட்டிக்கிரியைபூசையும் இந்துசமயப் பேரவை, யாழ்ப்பாணம், கைதடி சைவச் சிறுவர் இல்லத்தில் எழுந்தருளி இருக்கும் ஸ்ரீசிவகாமசுந்தரி சமேத தில்லைநடராஜப்பெருமானுக்கு விஷேட பூசை வழிபாடும் மகேஸ்வரபூசையும் நடைபெறும். அத்துடன் எமது இல்லத்தில் நிகழும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனை வழிபாட்டிலும் மதியபோசன விருந்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

*எஸ். கே. சிவலிங்கம்*
(கிராம உத்தியோகத்தர்)
*காரைநகர்.*

(C/12067)

# கச்சதீவுக்குப் படகில் சென்று உரிமையை நிலைநாட்டுவோம்!

## இந்திய மீனவர் சங்கத் தலைவர்

சென்னை, மே 8

''கச்சதீவிற்கு படகுகளில் சென்று அங்கு வலைகளை உலர்த்தி எமது உரிமையை நிலை நாட்டுவோம்''

அகில இந்திய மீனவர் சங்கத் தலைவர் எம். ஏ. ராஜா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இலங்கைக் கடற்படை தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடத்துவதைக் கண்டித்து சென்னையிலுள்ள இலங்கைத் தூதராலயத்தின் முன்பாக நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் முடிவில் உரையாற்றுகையில் அவர் இதனைக் கூறினார்.

காஷ்மீரில் பாகிஸ்தான் நடவடிக்கையைக் கண்டிக்கும் இந்திய அரசு தமிழக மீனவர்களைச் சுட்டுக் கொல்லும் இலங்கை அரசை ஏன் கண்டிக்கவில்லை என்று அங்கு கேள்வி எழுப்பினார்.

''ஐ. நா. சபை, தெற்காசிய நாடுகள் கூட்டமைப்பு மற்றும் அணிசேரா நாடுகள் அமைப்பு போன்றவற்றில் இலங்கை அரசின் போக்குக் குறித்து இந்திய அரசு குரல் எழுப்ப வேண்டும்'' என்றும் ராஜா கேட்டுக் கொண்டார்.

# எதியோப்பியாவில் நிவாரண பணிகள் மழையால் தடை

அடிஸ் அபாபா, மே 8

கடும் வரட்சி மற்றும் பட்டினியால் பாதிப்படைந்திருக்கும் எதியோப்பியாவில் நிவாரணப் பணிகள் மழைகாரணமாகத் தடைப்பட்டுள்ளன.

அங்கு பணிபுரியும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

கடும் மழையினால் நிவாரணப் பொருள்களை எடுத்து வரும் விமானங்கள் தரையிறங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

இந்த நிலை நீடித்தால் எதியோப்பியாவில் பட்டினிச் சாவுகள் பெருமளவில் அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது. அத்துடன் மழையினால் தொற்று நோய்கள் பரவும் ஆபத்தும் ஏற்பட்டுள்ளது. அதற்கான நோய்த்தடுப்புப் பணிகளைமேற்கொள்வதற்கு மோசமான காலநிலை தடையாக இருப்பதாகக் கூறப்படுகிறது. (ஐ ஒ)

## தடையை மீறி மாநாடு நடத்த முயற்சி

சிதம்பரம், மே 8

தமிழகஅரசின் தடையை மீறி சிதம்பரத்தில் திட்டமிட்டபடி நேற்றுக்காலை ஈழத்தமிழர் மாநாட்டை நடத்த முயற்சித்தவேளை தமிழர் தேசிய இயக்கத் தலைவர் ப. நெடுமாறன் மற்றும் அவரது ஆதரவாளர்கள் காவற்றுறையினரால் கைது செய்யப்பட்டதாகப் பிந்திய செய்திகள் தெரிவித்தன. [ஐ—ஒ]

சிதம்பரத்தில்நேற்றுஆரம்பமாகஇருந்த

# ஈழத் தமிழர் ஆதரவு மாநாட்டுக்கு கடைசி நேரத்தில் தடை விதிப்பு!

சென்னை, மே 8

சிதம்பரத்தில் நேற்றுக் காலை ஆரம்பமாக இருந்த ஈழத் தமிழர் ஆதரவு எழுச்சி மாநாட்டுக்குக் கடைசி நேரத்தில் திடீரென மாநில காவல் துறையினர் அனுமதி வழங்க மறுத்துள்ளனர்.

இது குறித்து மாநாட்டு ஏற்பாட்டாளர் கே. வெங்கட்ராமன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டுச் செய்தி ஏஜென்ஸி ஒன்றுக்கு அளித்த பேட்டியில் அவர் கூறியதாவது:

இந்த மாநாட்டுக்கான ஏற்பாடுகள் பல நாள்களுக்கு முன்பே ஆரம்பமாகி இருந்தன. அப்போதே இதற்கான அனுமதியைக் கோரி இருந்தோம். அதற்குக் காவல் துறையினர் அனுமதி அளித்திருந்தனர்.

நாங்கள் இந்த மாநாட்டை ஆனையிறவு வெற்றி மாநாடாகவும் நடத்தத் தீர்மானித்திருந்தோம். இந்த நேரத்தில் மாநாடு ஆரம்பமாவதற்கு ஒருநாள் முன்பாகத் திடீரென மாநாட்டுக்கான அனுமதியை ரத்துச் செய்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் அதற்கான காரணம் எதனையும் அரசு அறிவிக்கவில்லை.

இறுதி நேரத்தில் ஈழத்தமிழர் ஆதரவு மாநாட்டைத் தமிழக அரசு தடை செய்தற்கும் கருணாநிதி—வாஜ்பாய் சந்திப்புக்கும் இடையில் தொடர்பிருக்கலாம் என நான் சந்தேகிக்கின்றேன்.

அரசின் இந்த முடிவைத் தொடர்ந்து பழ. நெடுமாறன், சுப. வீரபாண்டியன் போன்றவர்களோடு கலந்து பேசி அடுத்த நடவடிக்கை குறித்து முடிவு செய்வோம்.

இவ்வாறு கே. வெங்கட்ராமன் அந்தப் பேட்டியில் மேலும் தெரிவித்தார். (ஐ-ஒ)

## ஆசிய வங்கியின் வருடாந்த கூட்டம்

பாங்கொக், மே 8

ஆசிய வளர்ச்சி வங்கியின் 33 ஆவது வருடாந்தப் பேரவைக் கூட்டம் தாய்லாந்தில் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

55 நாடுகளின் பிரதிநிதிகள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்கின்றனர்.

ஆசிய வளர்ச்சி வங்கி 1956 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அதன் உறுப்பு நாடுகளின் சமூக, பொருளாதார வளர்ச்சிக்கு உதவுவதற்காக இந்த வங்கி ஆரம்பிக்கப்பட்டது. (ஒ)

## அன்வர் மீதான தீர்ப்புக்குறித்து விளக்கமளிக்க நீதிபதிகள் மறுப்பு

கோலாலம்பூர், மே 8

மலேசிய முன்னாள் துணைப்பிரதமர் அன்வர் இப்ராகிம் மீதான தண்டனையை உறுதிசெய்த நீதிபதிகள் தீர்ப்புக் குறித்து விளக்கமளிக்க மறுத்து விட்டனர். இதனால் கொதிப்படைந்த அன்வர் இது கோழைத்தனமானது, அரசியல் நோக்குடைய துன்புறுத்தல் என்றுநீதிபதிகளைப் பார்த்து கோபத்துடன் சத்தமிட்டார்.

அன்வர் மீது மலேசிய அரசு ஊழல் குற்றம் சுமத்தி வழக்குத் தொடர்ந்திருந்தது. அந்த வழக்கில் அவருக்கு 6 ஆண்டுகள் சிறைத் தண்டனைவிதிக்கப்பட்டது.

இந்தத் தண்டனையை எதிர்த்து அன்வர் மேன்முறையீடு செய்திருந்தார். இந்த மனுவை விசாரித்த நீதிபதிகள் 'தண்டனை உறுதி செய்யப்படுகிறது' என்று மட்டும் கூறினர். ஆனால் அவர்கள் தீர்ப்பு முழுவதையும் அன்வருக்கு வாசித்துக் காட்ட மறுத்து விட்டனர்.

இதனாலேயே அன்வர் நீதிபதிகளைப் பார்த்து கோபாவேசத்துடன் குரல் எழுப்பினார்.

நீதிபதிகளின் இந்த நடவடிக்கை வழக்கறிஞர்கள், அதிகாரிகள் மற்றும் பத்திரிகையாளர்கள் உட்பட நீதிமன்றத்தில் இருந்த அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

முன்னாள்துணைப் பிரதமர் அன்வர் தன் மீது மலேசிய அரசு பழிவாங்கும் போக்கை மேற்கொள்வதாகக் கூறி வருகிறார். அவரின் வாதத்துக்கு இந்தச் சம்பவம் வலுச்சேர்த்திருப்பதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர். (ஐ - ஒ)

## கூட்டணி தோல்வி

புதுடில்லி, மே 8


திரிபுராவில் பழங்குடிப் பகுதி சுய நிர்ணய மாவட்ட சபைத் தேர்தலில் ஆளும் இடதுசாரி முன்னணி தோல்வியடைந்துள்ளது.

புதிதாக அமைக்கப்பட்டுள்ள திரிபுரா மக்கள் முன்னணி மொத்தமுள்ள 30 இடங்களில் 16 இடங்களைப் பெற்றுள்ளது. இது அறுதிப் பெரும்பான்மையாகும்.

## பீஹார் அமைச்சருக்கு நீதிமன்றம் பிடி ஆணை

பட்னா, மே 8

பீஹாரில் நீர்ப்பாசனத் துறை அமைச்சர் ஜெயபிரகாஷ் நாராயண் யாதவிற்கு பிணையில் செல்ல முடியாத




பிடியாணையை பட்னா நீதி மன்றம் பிறப்பித்தது

நாராயண்யாதவ் 87–92 ஆண்டுக் காலப்பகுதியில் மாநில கல்வி அமைச்சராக இருந்த போது 150 பேருக்கு போலியான உயர் கல்விப் பட்டங்களை— வழங்கியதாகவும் அதன் மூலம் பெரும் தொகைப் பணத்தை ஊழல் செய்ததாகவும் அவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்த வழக்கிலேயே பட்னா சிறப்பு நீதிமன்றம் நாராயண் யாதவிற்கு பிடியாணை பிறப்பித்தது.

இதனைத் தொடர்ந்து அவர் தனது அமைச்சர் பதவியை ராஜினாமாச் செய்துள்ளார். (ஐ)

# பிரிட்டிஷ் உள்ளூராட்சித் தேர்தலில் ஆளும் தொழில் கட்சிக்கு பின்னடைவு

## அரசியல் தஞ்சம் கோருவோருக்கு பாதிப்பு?

லண்டன், மே 8

பிரிட்டனில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் எதிர்க்கட்சியான கன்சர்வேட்டிவ் கட்சி அதிக இடங்களைக் கைப்பற்றியுள்ளது.

அங்கு அரசியல் தஞ்சமடைந்துள்ளோருக்கு எதிராகக் கடும் போக்கைக் கடைப்பிடித்துவரும் இந்தக் கட்சியின் வெற்றி அகதிகளுக்குப் பாதிப்பு ஏற்படுத்தலாம் எனக் கருதப்படுகிறது.

தேர்தல் பிரசாரத்தின் போது பிரிட்டனில் அரசியல் தஞ்சமடைந்தோருக்கு எதிராக கன்சர்வேட்டிவ் தலைவர்கள் கடுமையான கருத்துக்களை வெளியிட்டு வந்தனர்.

இதனால் அகதிகள் மீது இன ரீதியான வன்முறைத் தாக்குதல் நடைபெறலாம் என்று அஞ்சப்பட்டது.

பல மனித நேய அமைப்புகள் இத்தகைய கருத்துக்களைக் கண்டித்திருந்தன.

தற்போது கன்சர்வேட்டிவ் கட்சியினர் உள்ளூராட்சித் தேர்தலில் பெற்றுள்ள பெரும் வெற்றி அகதிகள் தொடர்பான கடும் கொள்கையைத் தொடர்ந்து அக்கட்சி கடைப்பிடிக்க ஊக்கமளிக்கும் என்று கருதப்படுகின்றது. (ஒ)

## லண்டன் மாநகர மேயராக சுயேச்சை வேட்பாளர்!

லண்டன், மே 8

லண்டன் நகர மேயர் தேர்தலில் சுயேச்சை வேட்பாளர் கென் லிவிங்ஸ்டன் வெற்றி பெற்றுள்ளார்.

இவரின் வெற்றி பிரதமர் பிளேயருக்கும், தொழிற் கட்சிக்கும் பலத்த அடி என்று கூறப்படுகின்றது.

முன்னர் தொழிற் கட்சியில் இணைந்திருந்த இவர் பிரதமர் பிளேயரைக் கடுமையாக விமர்சித்து வந்தார். இதனால் அவர் கட்சியை விட்டு நீக்கப்பட்டார். இதனைத் தொடர்ந்து லண்டன் நகர மேயர் தேர்தலில் தொழில் கட்சியின் உத்தியோகபூர்வ வேட்பாளரை எதிர்த்து சுயேச்சையாகப் போட்டியிட்டார்.

இந்தத் தேர்தலை கௌரவப் பிரச்சினையாக எடுத்துக் கொண்ட பிளேயர் லிவிங்ஸ்டனைத் தோற்கடிக்க முழு முயற்சிகளையும் செய்தார், ஆனால் கென் லிவிங்ஸ்டன் மேயராக வெற்றி பெற்றுள்ளார்.

இதுவரை நியமனமேயரைக் கொண்டிருந்த லண்டன் மாநகருக்கு முதல்முறையாக தெரிவு செய்யப்பட்ட மேயர் இவராவார். (ஐ-ஒ)

# சொந்த நிலம் அற்றோர் பிறேசிலில் ஆர்ப்பாட்டம்

## அரச கட்டடங்கள் ஆக்கிரமிப்பு

பிரேஸிலியா, மே 8

பிறேசிலில் சொந்த நிலம் இல்லாதவர்கள் தமக்கு நிலம் மற்றும் கடன் உதவி வழங்கக்கோரி அரசுக்கு எதிராக நாடளாவிய ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர். அச்சமயம் அரச வங்கிக்கட்டடம் உள்ளிட்ட பொதுக் கட்டடங்களுக்குள் அத்து மீறி நுழைந்த அவர்கள் அவற்றை ஆக்கிரமித்துக் கொண்டனர்.

பொலிஸார் ஆர்ப்பாட்டக்காரர்களை அடக்க முயன்ற போது பல இடங்களில் பெரும் மோதல்கள் வெடித்தன.

இதனைத் தொடர்ந்து நூற்றுக்கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலத்தீன் அமெரிக்காவில் பெரிய நாடான பிறேசிலில் வெளிநாடுகளில் இருந்து வந்த சிறுபான்மையினரிடமே பெருமளவு நிலங்கள் சொந்தமாக உள்ளன. ஆனால் பூர்வீக குடிகளில் சுமார் ஒரு லட்சம் குடும்பங்களுக்குச் சொந்தமாக நிலம் இல்லை.

அதனால் நிலமற்ற பிறேசிலியர்கள் ஒன்று சேர்ந்து சங்கம் அமைத்துப் போராடி வருகிறார்கள்.

தற்போது அதிபர் பெர்னான்டே ஹென்ரிகியுகார்டோஸ் நிலமற்றோர் சங்கத்தினருடன் பேச்சு நடத்த ஒப்புக் கொண்டுள்ளார். இதனால் தமது போராட்டங்களைத் தற்காலிகமாகநிறுத்தி வைத்துள்ளதாக நிலமற்றோர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (ஒ)

## பூமி அதிர்ச்சி

இந்தோனேசியாவில் பல இடங்களில் ஒரே சமயத்தில் ஏற்பட்ட பூமியதிர்ச்சியால் பலத்தசேதம்ஏற்பட்டுள்ளது.

இந்தப் பூமி அதிர்ச்சியினால் 22 பேர் உயிரிழந்துள்ளனர். 100 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் வீடுகளை இழந்துள்ளனர்.

மீட்புப் பணிகள் முழு வேகத்தில் நடந்து வருவதாக அரசு தெரிவித்துள்ளது. (ஒ)

# குடாநாட்டில் உள்ள படையினருக்கு தொடர்ந்தும் கடல் வழி விநியோகம்

வவுனியா, மே 8

குடாநாட்டில் உள்ள படையினருக்கான பொருள்கள் தொடர்ந்தும் வழமைபோல் கடற்படைக் கப்பல்கள் மூலம் விநியோகிக்கப்பட்டு வருவதாகக் கடற்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

காங்கேசன்துறைத் துறைமுகம் ஊடாகப் படையினருக்கான பொருள்கள் தடையின்றி வழங்கப்படுவதாகக் கடற்படை வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

(ஐ-164)

## மக்கள் பாதுகாப்புச் சட்டத்தில் ஓர் அத்தியாயம் நீக்கப்பட்டது

கொழும்பு மே 8

தேசிய பாதுகாப்பை உறுதி செய்வதற்காக அண்மையில் அமுல் செய்யப்பட்ட பொது மக்கள் பாதுகாப்புச் சட்டத்தில் ஓர் அத்தியாயம் நீக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வர்த்தமானி அறிவித்தலின் படி 55 எப்.எட். என்ற அத்தியாயமே நீக்கப்பட்டுள்ளது.

1983 ஆம் ஆண்டு அச்சம் நிலவிய காலப்பகுதியிலே இந்த அத்தியாயம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது.

கூட்டங்களில் கலந்து கொள்பவர்களின் எண்ணிக்கையினைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் பொலிஸாருக்கு வழங்கப்படுவது, மரணச் சடங்குகள் பற்றிய விவரங்கள் போன்றவை இந்த அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

கடைசியாக வெளிவந்த வர்த்தமானி அறிவித்தலின் படி ஒருவர் அதிக பட்சமாக ஒரு வருட காலத்திற்கு மாத்திரமே தடுத்து வைக்கப்பட்டிருக்கலாம்.

அவசர காலச் சட்ட விதிகளை மீறியதற்காக ஒரு நபர் கைது செய்யப்படும் பட்சத்தில் உரிய அதிகாரி அக்கைது குறித்த விவரத்தை 24 மணி நேரத்தினுள் மேலிடத்துக்கு அறிவிக்க வேண்டும். அத்துடன் கைதுதொடர்பான உறுதிப்பத்திரத்தையும் குடும்பத்தினருக்கு வழங்கவேண்டும்.

புதிய விதிகளின் 18ஆவது அம்சத்துக்கமைய கைது செய்யப்படும் நபர்களின் பிணை அனுமதிப் பத்திரங்களை சமர்ப்பிப்பதற்கு சட்டமா அதிபரின் உத்தரவு தேவையில்லாததாகும் என்றும் புதிய வர்த்தமானி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-5)

## பயண ஏற்பாட்டு கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே 8

வெளிமாவட்டங்களுடனான போக்கு வரத்துக்கள் தடைப்பட்டுள்ளமையினால் இங்கிருந்து பேராதனைப் பல்கலைக்கழகத்துக்குச் செல்வதற்காகக் காத்திருக்கும் அனைத்து மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பேராதனைப் பல்கலைக்கழகத்துக்குச் செல்லவுள்ளோருக்கான போக்குவரத்து ஒழுங்குகளை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் மூலமாக ஒழுங்கு செய்வது தொடர்பாக ஆராயப்படவுள்ளதாகவும் —

சம்பந்தப்பட்ட சகலரையும் அன்றையதினம் சமுகம் தருமாறும் —

பேராதனைப் பல்கலைக்கழக பொருளியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் க. ஞானேஸ்வரன் கேட்டுள்ளார்.

(ஐ-9)

## காக்கைதீவுப் பகுதிக்கான நீர் விநியோகம் ஸ்தம்பிதம்

நல்லூர், மே 8

ஆனைக்கோட்டையில் இருந்து காக்கைதீவு வரையான தண்ணீர் விநியோகச் சேவை சீர்குலைந்துள்ளது. இதனால் காக்கைதீவில் உள்ள மீனவர் குடியேற்றத் திட்டத்தைச் சேர்ந்த 40 மீனவக் குடும்பங்கள் குடிதண்ணீரைப் பெற்றுக் கொள்ள முடியாமல் உள்ளது.

ஆனைக்கோட்டை கரைப்பிரான் பிள்ளையார் கோயிலடியில் இருந்த நீர் இறைக்கும் இயந்திரம் களவாடப்பட்டதைத் தொடர்ந்து மேற்படி சேவை பாதிக்கப்பட்டுள்ளது.

5 லட்சம் ரூபா செலவில் ஐ. நா. அபிவிருத்தி நிறுவனத்தின் உதவியுடன் சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் இந்த நீர் விநியோகத் திட்டத்தைச் செயற்படுத்தியிருந்தது.

(ஐ-103)

## மாதாந்த உதவிப் பணம்

வலி. கிழக்கு, மே 8

சோப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள நல்லூர் தபாலகத்தில் மாதாந்த உதவிப்பணம் பெறுவோர் இம்மாதத்துக்குரிய கொடுப்பனவுகளை உடன் பெற்றுக் கொள்ளுமாறு தபாலதிபர் கேட்டுள்ளார்.

இம்மாதம் 15 ஆம்திகதிக்கு முன்பாக இந்தக் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-180)

## பாடசாலைக் கூரை சேதம்

வலி. கிழக்கு, மே 8

கல்வியங்காடு இந்து தமிழ்க் கலவன் பாடசாலைக் கட்டடங்கள், கூரைகள் என்பன மிகவும் சேதமுற்ற நிலையில் இருப்பதால் ஆசிரியர்கள், மாணவர்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பாடசாலை வகுப்பறை மண்டபக் கூரைகளின் மரங்கள் மிகவும் பழுதடைந்து காணப்படுவதால் எந்த வேளையிலும் கூரை விழும் நிலைமையும் காணப்படுகின்றது.

(ஐ-180)

# வடக்கு-கிழக்கு தமிழரின் மரபுவழி தாயகம் என்பதை உணர வைத்தவர்

## செல்வா நினைவு தினக்கூட்டத்தில் உரை

வலிகாமம் தெற்கு, மே 8

"இந்தியாவின் சுதந்திரத்திற்காக அகில இந்தியக் காங்கிரஸ் கட்சி கூட்டாகச் செயற்பட்டது போல இலங்கைத் தமிழர்களிடையேயும் பல்வேறு கட்சிகள் இருப்பினும் தமிழ் இன ஒற்றுமையைப் பேணி அவர்களின் சுதந்திர இறைமைக்காக காங்கேசன்துறை முதல் பொத்துவில் வரை தமது சமத்துவ எண்ணத்தைப் முன் வைத்து மக்களின் பேராதரவை பெற்றவர் தந்தை செல்வா"

தந்தை செல்வா அவர்களின் 23 ஆவது நினைவு தினம் அவர் வழிபாடு செய்து வந்த ஆலயத்தில் தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஆதரவுடன் கடந்த 26 ஆம் திகதி நடைபெற்றது.

அவ்வைபவத்தில் உரையாற்றிய உடுவில் கிராம சேவையாளர் எஸ். ஆர். யேசுபாலன் மேற்கண்டவாறு கூறினார்.

தந்தை செல்வா தனது அறிவு, தீர்க்க தரிசனம், செல்வம் யாவற்றையும் தமிழ் மக்களுக்காக அர்ப்பணித்தவர். டொனமூர், சோல்பரி அரசியல் திட்டங்கள் தமிழ் மக்களின் உணர்வுகளை பிரதிபலிக்காமையினால் 1949 இல் தமிழரசுக் கட்சியை ஆரம்பித்தார். இதன் பின்னர் 1957 இல் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா, 1960 இல் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா 1965 இல் டட்லி சேனநாயக்கா ஆகியோருடன் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் நிறைவேறாது போனாலும், வடக்கு — கிழக்கு மாகாணத் தமிழ் மக்களின் மரபுவழித் தாயகம் என்பதை உணரவைத்து தமிழ்மக்களை தேசிய இன அந்தஸ்துப் பெற வைத்தவர்.

ஒப்பந்தங்கள் மட்டுமல்ல; பல சாத்வீகப்போராட்டங்களை முன்னின்று நடத்தியவர். காலிமுகத்திடல், யாழ். கச்சேரி ஆகிய இடங்களில் பெரிய அளவில் சத்தியாக்கிரகங்களையும் தீண்டாமை ஒழிப்பு வாரம், ஊர்வலம் என்பவற்றையும் நடத்தி 1965 இல் தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தை அமுல் படுத்த வழி செய்தார்.

மலையக மக்கள், முஸ்லிம்கள் பாதிக்கப்பட்ட போதெல்லாம் அவர்களுக்காகக் குரலெழுப்பியவர் நேர்மையுடன் கூடிய கடமை, கட்டுப்பாடு கண்ணியத்துடன் செயற்பட்டதனால் இன்றும் அவர் தமிழ் மக்களால் 'தேசபிதா' என அழைக்கப்படுகிறார். அவருடைய கொள்கை வழி நின்று தமிழ் இனம் சுதந்திரமடைய நாம் பாடுபட வேண்டும்— என்றார். (ஐ-152)

## தற்காலிக ஏற்பாட்டின் கீழ் கூட்டுறவு கணக்காய்வில் ஈடுபட்டோருக்கு இவ்வாண்டு நியமனக் கடிதமில்லை

வலி. வடக்கு, மே 8

யாழ். மாவட்டக் கூட்டுறவுத் திணைக்களத்தில் உத்தியோகப் பற்றற்ற முறையில் கணக்காய்வு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டு வந்த 40 ஊழியர்களுக்கு இவ்வாண்டு முதல் நியமனக் கடிதங்கள் வழங்கப்படவில்லை.

இவர்கள் யாழ், மாவட்டக் கூட்டுறவுச் சங்கங்களின் கணக்குகளைக் கணக்காய்வு செய்வதற்காக ஆள் பற்றாக்குறையைத் தொடர்ந்து வடக்கு—கிழக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் அனுமதியுடன் நியமனம் பெற்றனர். இவர்களுக்கு வேண்டிய தொழில்சார் பயிற்சி மற்றும் பரீட்சை என்பன தேசிய கூட்டுறவுச் சபையின் அனுசரணையுடன் கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்பட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த 1997 ஆம் ஆண்டு முதல் உதவிக் கணக்காய்வாளர்கள் என்ற நியமனக் கடிதத்தின்கீழ் தமது கடமைகளை இவர்கள் மேற்கொண்டு வந்தனர். ஆனால் இவ்வாண்டு இக் கடிதம் இவர்களுக்கு வழங்கப்படாமல் விடப்பட்டுள்ளது.

(ஐ-86-17)

## நூலக வாரம்

அச்சுவேலி, மே 8

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியில் நூலகவாரம் இன்று தொடக்கம் எதிர்வரும் 14 ஆம் திகதி வரை கொண்டாடப்படவுள்ளது.

நூலகவாரத்தை முன்னிட்டு மாணவர் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தக்கூடிய நிகழ்வுகள், நூல் சேகரித்தல் போன்றவற்றுக்கான ஏற்பாடுகளைக் கல்லூரி அதிபர் வ. ஆறுமுகம் தலைமையிலான நூலக அபிவிருத்திக் குழு செய்துள்ளது. (ஐ-11)

## முகாமில் இருந்த இளைஞன் கைது

யாழ்ப்பாணம், மே 8

இணுவில் கிழக்கில், விளாத்தியடி நலன்புரி முகாமில் இருந்த கோவிந்தன் புவீந்திரன் (வயது 19) என்ற இளைஞன் கடந்த 5ஆம் திகதி அங்கு சென்ற படையினரால் கைது செய்யப்பட்டதாக உறவினர்களினால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறையிடப்பட்டுள்ளது.

இவரது கைதினை உறுதிப்படுத்தும் பற்றுச்சீட்டு ஊரெழு முகாம் இராணுவத்தினரால் உறவினர்களிடம் வழங்கப்பட்டுள்ளது.

(இ-9)

## வாக்குப் பெட்டிகளைத் தயாரிக்க தேர்தல் திணைக்களம் பணிப்பு

வவுனியா, மே 8

உடனடியாக 3 ஆயிரம் வாக்குப் பெட்டிகளைத் தயாரிக்குமாறு தேர்தல் திணைக்களம் அரசாங்க தொழிற்சாலைக்கு உத்தரவிட்டிருப்பதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று நேற்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

திடீரெனத் தேர்தல் நடத்தப்பட்டால் அதற்கு முன்னேற்பாடாகவே இந்த வாக்குப் பெட்டிகள் தயாரிக்கப்படுவதாக தேர்தல் திணைக்கள வட்டாரங்களை மேற்கோள் காட்டி அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

எதிர்வரும் ஒகஸ்டில் நாடாளுமன்றத்தைக் கலைத்து ஒக்டோபரில் தேர்தலை நடத்த அரசு முன்னர் முடிவு செய்திருந்தது.

எனினும் — நாட்டை யுத்த நிலைமையில் வைத்திருப்பதென்ற அரசின் முடிவு காரணமாக தேர்தல் நடைபெற வாய்ப்பு இல்லை எனக் கருதப்பட்டது. (இ-ஐ-3-164)

## வீதி திருத்த கற்கள் பறிப்பு

வலி. வடக்கு, மே 8

நீண்டகாலமாகத் திருத்தப்படாமல் இருந்த சுன்னாகம் செல்லாச்சி அம்மையார் வீதியைத்திருத்தநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கென வலி. தெற்குப் பிரதேச சபையினால் கற்கள் பறிக்கப்பட்டுள்ளன.

காங்கேசன்துறை வீதி வழியாகச் செல்வோர் சுன்னாகம் பகுதிக்குச் செல்ல இந்த வீதியையே பெரிதும் பயன்படுத்தி வருகின்றனர்.

(ஐ-86)

## படுகொலைகளைத் தொடர்ந்து மன்னாரில் அநாமதேயக் கடிதம்

வவுனியா, மே 8

மன்னாரில் அண்மையில் இளைஞர்கள் சிலர் மர்மமான முறையில் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து இந்தக் கொலைகள் தொடர்பாக அநாமதேயக் கடிதங்கள் பலருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

'மன்னாரில் ராஸிக் பாணியில் புளொட்' என்ற தலைப்பில் மன்னார்மாவட்ட மாணவர் ஒன்றியம் என்னும் பெயரில் இத்தக் கடிதங்கள் நீதிமன்றம் மற்றும் அரச அலுவலகங்கள் பலவற்றுக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக மன்னார் செய்திகள் தெரிவித்தன.

மன்னாரில் அண்மையில் இரு இளைஞர்கள் மர்மமான முறையில் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக மதத் தலைவர்களோ, பொது அமைப்பினரோ கண்டனம் எதனையும் வெளியிடவில்லை என்றும்—

இப் படுகொலைகள் இந்த அமைப்பினாலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை மன்னார் மக்கள் அனைவரும் அறிவர் என்றும்— அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(இ-ஐ-க-3)

## பெற்றோல் அனுமதிப் பத்திரம்

கொக்குவில், மே 8

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வாகன உரிமையாளர்களுக்கு பெற்றோல் வழங்குவதற்கான அனுமதிப் பத்திரங்கள் இன்று திங்கட்கிழமை முதல் நல்லூர் பிரதேச செயலகத்தில் வழங்கப்படவுள்ளது.

சொந்தமாக வாகனம் வைத்திருப்போர் வாகன உரிமைப் பத்திரம், வரி அறவிட்டமைக்கான சான்றிதழ் ஆகியவற்றை ஆதாரமாகக் காட்டி பெற்றோல் அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ69-135

# இஸ்ரேலுடன் உறவை ஏற்படுத்திய அரசின் முடிவு வரவேற்கத்தக்கது

## தினேஷ் குணவர்த்தன கூறுகிறார்

கொழும்பு, மே 8
விடுதலைப்புலிகள் இயக்கத்தை முற்றாக முறியடிப்பதற்கு இலங்கை இஸ்ரேல் நாட்டின் உதவியை நாடியது வரவேற்கத்தக்கது என்று மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் பிரகடனம் செய்துள்ள பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டம் வரவேற்கத்தக்கது. அந்தச் சட்டங்களை அரசு முழுமையாக அமுல்படுத்த வேண்டும். அரசியல்வாதிகள் தமது வெளிநாட்டு விஜயங்களை ரத்துச் செய்துவிட்டு நெருக்கடிமிக்க இக்காலகட்டத்தில் நாட்டுக்காக உழைக்க வேண்டும். யுத்தம் முடியும் வரை முழு நாட்டிலும் களியாட்ட நிகழ்ச்சிகள், வேடிக்கை நிகழ்ச்சிகளை ரத்துச் செய்யவேண்டும்.

யுத்த முனையில் எமது படை வீரர்கள் இறைமை, ஐக்கியத்தைப் பாதுகாக்கத் தமது உயிர்களைத் தியாகம் செய்யும்போது எமக்கு களியாட்டங்கள் அவசியம்தானா?

இந்திய அரசு புலிகள் இயக்கத்தை ஒரு பயங்கரவாத இயக்கமாக பிரகடனம் செய்து அந்த இயக்கத்தைத் தடைசெய்துள்ளது. ஐக்கிய இலங்கைக்குள் இனப்பிரச்சினை தீர்க்கப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டை அது கொண்டுள்ளது. ஆகையால் இந்தியா இலங்கைக்கு நேரடியாக உதவி செய்யாது விட்டாலும் இலங்கையின் கோரிக்கையை இந்தியா முற்றாக நிராகரிக்கவில்லை.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-5)

## இஸ்ரேலுடனான உறவு:
## சந்திரிகாவைச் சந்தித்து அஷ்ரப் ஆட்சேபனை

கொழும்பு, மே 8
இலங்கை அரசு இஸ்ரேலுடன் மேற்கொள்ளவுள்ள ராஜதந்திர உறவை மீள் பரிசிலனை செய்யுமாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் எம். எச். எம். அஷ்ரப் ஜனாதிபதி சந்திரிகாவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதி சந்திரிகாவை சந்தித்து உரையாடிய அவர் இஸ்ரேலுடனான அரசின் உறவு குறித்து தமது கட்சியினதும் முஸ்லிம்களினதும் நிலைப்பாடு தொடர்பாக விளக்கிக் கூறினார்.

முஸ்லிம் காங்கிரஸின் இந்த கோரிக்கையை ஜனாதிபதி நிராகரிப்பாரானால் இது தொடர்பாக கட்சியின் நடவடிக்கை குறித்து அரசியல் குழு கூடி ஆராயவுள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-5-4)

## நாட்டு நலன் கருதியே இஸ்ரேலுடன் உறவு

### அமைச்சர் பௌசி தெரிவிப்பு

கொழும்பு, மே 8
அரசாங்கம் நாட்டின் பாதுகாப்பையும் நலனையும் கருத்திற்கொண்டே இஸ்ரேலுடன் இராஜதந்திர உறவை ஏற்படுத்துகிறது. இதற்கு எதிராக எம்மால் எதையும் செய்ய முடியாது என்று போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஏ. எச். எம். பௌசி தெரிவித்தார்.

இது தொடர்பாக அமைச்சர் மேலும் கூறியதாவது:

நாட்டு நிலைமையைக் கருத்திற் கொண்டு உடனடியாகச் சில நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஜனாதிபதிக்கு ஏற்பட்டது.

அதனால் அமைச்சரவை அங்கத்தவர்களாகிய நாம் அனைவரும் எவ்வாறான அவசர நடவடிக்கைகளை எடுப்பதற்கும் அதிகாரம் அளிக்கும் வகையில் கையொப்பமிட்டு ஜனாதிபதிக்கு அங்கீகாரம்வழங்கியுள்ளோம். ஆனால் இந்த அங்கீகாரம் வழங்கப்படும்போது இஸ்ரேலுடன் இராஜதந்திர உறவை ஏற்படுத்துவது பற்றிய உத்தேசம் இருந்ததாக அறிய முடியவில்லை.

இப்படி அவர் மேலும் கூறினார். (ஐ-5)

## யாழ்., வன்னி மக்களுக்கும் இந்தியா உதவ வேண்டும்

கொழும்பு, மே 8
யாழ்ப்பாணத்திலும், வன்னியிலும் போரினால் பல கஷ்டங்களை அனுபவித்து வரும் மக்களுக்கு இந்தியா மனிதாபிமான முறையில் உதவி செய்ய வேண்டும் என்று தமிழர் விடுதலைக்கூட்டணி தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-

யாழ்ப்பாணத்திலும், வன்னியிலும் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் மற்றும் மருந்துப் பொருள்களின்றி மக்கள் பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் போரினால் ஆயிரக்கணக்கான மக்கள் சிக்குண்டுள்ளார்கள் அவர்களைக் காப்பாற்ற இந்தியா முன்வர வேண்டும். இலங்கை அரசுக்கு உதவி செய்ய முன்வந்துள்ள இந்திய அரசு தமிழ் மக்களுக்கும் உதவ வேண்டும் — இப்படி அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

(ஐ-5-4)

## எந்திரவியல் டிப்ளோமா பயிற்சிக்கு ஆள்சேர்ப்பு

யாழ்ப்பாணம், மே 8
கட்டுநாயக்காவில் உள்ள தொழில்நுட்பப் பயிற்சி நிறுவகத்தில் எந்திரவியல் விஞ்ஞான டிப்ளோமா 4 வருடப் பயிற்சி நெறிக்கு எந்திரவியல் சிறப்புப் பயிலுநர்களைச் சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையினால் கோரப்பட்டுள்ளன.

ஜீ. சி. ஈ. உயர்தரப் பரீட்சையில் விஞ்ஞான எந்திரவியல் பாடங்களில் சித்தியடைந்த 18 வயதுக்கும் 25 வயதுக்கும் இடைப்பட்டவர்களிடமிருந்தே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன,

விண்ணப்பங்களை எதிர்வரும் ஜூன் 5 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விவரங்கள் ஏப்ரல் 28 ஆம் திகதி வர்த்தமானியில் பிரசுரமாகியுள்ளன.

மேலதிக விவரங்களையும் விண்ணப்பப் படிவத்தினையும் தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் கோயில் வீதி யாழ்ப்பாணத்திலுள்ள வடமாகாண அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்று சபையின் மாகாண முகாமையாளர் பொ. இராமநாதன் தெரிவித்துள்ளார்.

(ஐ-5)

## மாணவருக்கு அழைப்பு

உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தில் தரம் 5 மற்றும் தரம் 13 (ஜி. சி. ஈ உயர்தரம்) ஆகிய வகுப்புக்களில் கல்வி கற்கும் மாணவர்களை இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்துக்கு வருகை தருமாறு அதிபர் கேட்டுள்ளார் (க-15)

## ஆரம்ப சுகாதார நிலையம்

பண்ணாகம் கிராமத்தில் சுமார் ஐந்து லட்சம் ரூபா செலவில் நிறுவப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தின் கட்டட வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன.

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலரினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியைக் கொண்டு நிறுவப்பட்ட இந்த ஆரம்ப சுகாதார நிலையம் விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-135)

## ராஜகோபுரத்துக்கு அடிக்கல்

பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி ஆலயத்திற்கு ராஜகோபுரம் ஒன்று நிறுவப்படவுள்ளது. இதற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் கடந்த முதலாம் திகதி திங்கட்கிழமை சுபவேளையில் ஆலய பரிபாலன சபையினால் நடத்தப்பட்டது. (ஐ-135)

## செஞ்சிலுவைதின நிகழ்ச்சி

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் ஏற்பாட்டில் உலக செஞ்சிலுவைத் தினம் இன்று திங்கட்கிழமை இருபாலையில் உள்ள புதிய ஆரம்ப சுகாதார கேட்போர் கூடத்தில் பிற்பகல் 2. 30 மணிக்கு நடைபெறும்.

யாழ். கிளைத் தலைவர் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் கே. சண்முகநாதனும் கௌரவ விருந்தினர்களாக கோப்பாய் பிரதேச செயலர் கே. கேதீஸ்வரன், வைத்திய கலாநிதி வி. தியாகராஜா ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

அன்றைய தினம் இருபாலை ஆரம்ப சுகாதார கேட்போர் கூடமும் ஆரம்பித்து வைக்கப்படும். (ஐ-6)

# செய்திக் கொத்து

## சமாதான வழிபாடு

கொழும்புத்துறை, மே 8
யாழ். மாவட்டத்திலுள்ள கத்தோலிக்க ஆலயங்களில் நாட்டில் சமாதானம், அமைதி, நல்லுறவு நிலவ வேண்டி வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. கடந்த சனிக்கிழமை யாழ் இராசாவின் தோட்டம் அருள்மாதா ஆலயத்தில் விசேட வழிபாடுகள் நடைபெற்றன.

(ஐ-30)

## கட்டட வேலை

திருநெல்வேலி, மே 8
யாழ். சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளர் பணிமனைக்கென யாழ். நகரில் நிறுவப்பட்டு வரும் மாடிக்கட்டடத்தின் கீழ்மாடிக்கட்டட வேலைகள் தற்போது துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நீண்டகாலமாக தனியாருக்குச் சொந்தமான கட்டடங்களில் பல்வேறு வசதியீனங்களுக்கு மத்தியிலும், இட நெருக்கடிக்கு மத்தியிலும் இந்தப்பணிமனை செயற்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது.

(ஐ-135)

## சைக்கிள் உரிமத் தகடு

வடமராட்சி, மே 8
பருத்தித்துறை பிரதேச சபையினால் இவ்வாண்டுக்கான சைக்கிள் உரிமத் தகடுகள் சபையின் புலோலி உப அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டு வருகின்றன.

(ஐ-173)

## முத்திரையிட்ட தபால் உறை தட்டுப்பாடு

திருநெல்வேலி, மே 8
யாழ். மாவட்டத்தில் உள்ள தபால் அலுவலகங்களிலும், உப தபால் அலுவலகங்களிலும் முத்திரை பொறித்த தபால் உறைகளுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது.

இதேவேளை —
இரண்டு ரூபா முத்திரை, மூன்று ரூபா 50 சதம் பெறுமதியான முத்திரை ஆகியனவற்றிற்கும் தட்டுப்பாடு நிலவுகின்றது.
(ஐ-135)

## தபாற்பெட்டி அமைப்பு

கொழும்புத்துறை, மே 8
கொழும்புத்துறை கிழக்கு 5 ஆம் குறுக்குத் தெருவுக்கு அருகில் புதிய தபால் பெட்டி ஒன்று அண்மையில் வைக்கப்பட்டுள்ளது.

(ஐ-30)

## புத்தாண்டுக் கலைவிழா

சண்டிலிப்பாய், மே 8
கல்வித்திணைக்களம் விடுத்திருந்த சுற்றறிக்கைக்கு இணங்க பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் கடந்த 2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தரம் 8 மாணவர்களால் புத்தாண்டு கலைவிழா நடத்தப்பட்டது.

கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களை மாணவர்களிடையே மேம்படுத்துவதற்காக இவ்விழா நடத்தப்பட்டதாக கல்லூரி அதிபர் செல்வி பொ. கந்தசாமி தெரிவித்தார்.

(ஐ-135)

## மாணவர்களுக்கு தளபாட உதவி

கொக்குவில், மே 8
கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையின் மாணவர் நலன் கருதி பாடசாலை அபிவிருத்திச் சங்கம் 100 பாலர் கதிரைகளை பாடசாலைக்கு வழங்கியுள்ளது.

அத்துடன் மேற்படி பாடசாலையில் அமைக்கப்பட்டுள்ள சிறுவர் நூல் நிலையத்திற்குத் தேவையான தளபாடங்கள் செய்வதற்கும் நிதி உதவி வழங்கியுள்ளது.

(ஐ-69)

## மண்ணெண்ணெய் விநியோகம்

சண்டிலிப்பாய், மே 8
பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் இப் பகுதியிலுள்ள விவசாயிகளுக்கு தலா ஐந்து லீற்றர் மண்ணெண்ணெயை சங்கத்தின் எரிபொருள் நிரப்பு நிலையத்தின் மூலம் விநியோகித்து வருகின்றது.

இதேவேளை—
சங்கத்தின் கிளைகள் ஊடாக பாவனையாளர்களுக்கு மண் எண்ணெயின் கையிருப்பைப் பொறுத்து பங்கீட்டு அட்டைக்கு தலா இரண்டு லீற்றர் வீதம் வழங்கப்பட்டு வருவதாகச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ-135)

## மோட். சைக்கிள் திருட்டு

யாழ்ப்பாணம், மே 8
வளவுஒன்றில்விடப்பட்ட மோட்டார் சைக்கிள், சற்று நேரத்தில் திருடப்பட்டுள்ளது.

திருநெல்வேலி சிவன் கோயில் வீதிப் பகுதியில் கடந்த வியாழனன்றுஇடம்பெற்ற இச்சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த தவரூபன் என்பவருடைய மோட்டார் சைக்கிளே திருட்டுப்போனதாகும்.
(ஐ-15)

## ஆலயத்தில் சிரமதானப்பணி

கொழும்புத்துறை. மே 8
கோண்டாவில் தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீசிவகாமி அம்பாள் திருக்கோயிலின் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு ஆலய இந்து இளைஞர்மன்றத்தின் தொண்டர்கள் தற்போது சிரமதானப்பணியில் ஈடுபட்டு ஆலயச் சுற்றாடல்களை துப்புரவு செய்து வருவதாக ஆலய பரிபாலன சபையின் செயலாளர் சி. சிவலிங்கம் தெரிவித்தார்.

(ஐ-30)

## பங்கீட்டு அட்டைக்கு 5 கிலோ மா

யாழ்ப்பாணம், மே 8
நீர்வேலி ப. நோ. கூ. சங்கத்தினால் அதன் கிளை நிலையங்கள் மூலம் பங்கீட்டு அட்டைக்கு 5 கிலோ மாவும் 2 லீற்றர் மண்ணெண்ணெயும் வழங்கப்பட்டு வருகின்றன.

வாரத்தில் ஒரு தடவை இப்பொருள்கள் வழங்கப்படும் என்று சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ-10)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

# உடற்கல்வி டிப்ளோமா கற்கைநெறி 2000/2001

மேற்குறிப்பிட்ட கற்கை நெறிக்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் 15–06–2000 வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

**விண்ணப்பிக்கும் தகுதி நிலை:-**

1. வயது 18 – 28 வருடங்கள்.
2. க. பொ. த (உ/த) பரீட்சையில் ஆகக்குறைந்தது மூன்று பாடங்களில் சித்தியுடன், பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெற்றிருத்தல் வேண்டும்.
3. யாழ். பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் எழுத்துப் பரீட்சையிலும், செயன்முறை மதிப்பீட்டுப் பரீட்சையிலும், நேர்முகப் பரீட்சையிலும் சித்தியடைதல் வேண்டும்.

குறிப்பு:

1. மாவட்ட மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் நிகழ்ந்த விளையாட்டுக்களிலும் உடற்பயிற்சி விளையாட்டுக்களிலும் பங்குபற்றி வெற்றிபெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
2. உயர்தரப் பெறுபேற்றுப்பத்திரத்தின் போட்டோப் பிரதி இணைக்கப்படுதல் வேண்டும்.
3. பாடசாலை பரீட்சார்த்தியாயின் மொத்தத் திரட்டுப் புள்ளிகள் பாடசாலை அதிபரினால் பரீட்சைப் பெறுபேற்றுப் பத்திரத்தில் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.
4. மூன்று பாடங்களில் சித்தியடைந்த பாடசாலைப் பரீட்சார்த்திகள் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெற்றுள்ளமையை பாடசாலை அதிபர் பரீட்சைப் பெறுபேற்றுப் பத்திரத்தில் உறுதிப்படுத்தல் வேண்டும்.

**காலம்: உள்வாரியாக இரண்டு வருடங்கள் (முழு நேரம்)**

**பயிற்சிக்கட்டணம்: வருடமொன்றுக்கு 5000/-**

பல்கலைக்கழகக் காசாளரிடம் ரூபா 50 ஐ செலுத்திப் பெற்ற பற்றுச் சீட்டினை பரீட்சைகளும் அனுமதிகளும் கிளையில் சமர்ப்பித்து விண்ணப்பப்படிவத்தினையும் இதற்கான கைந்நூலையும் பெற்றுக்கொள்ளலாம்.

தபால் மூலம் பெறவிரும்புவோர் நிதியாளர், யாழ். பல்கலைக்கழகம் எனும் பெயருக்கு ரூபா 50ஐ செலுத்திப் பெற்றுக் கொண்ட காசுக் கட்டளையுடன் முத்திரை ஒட்டிய சுய விலாசமிடப்பட்ட 23X10 செ.மீ. அளவுள்ள கடித உறையை யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம், 154, ஆட்டுப்பட்டித்தெரு, கொழும்பு–13 தொலைபேசி இல. 435520 எனும் முகவரிக்கு அல்லது உதவிப்பதிவாளர், பரீட்சைகளும் அனுமதிகளும் கிளை, யாழ். பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்புவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்த விண்ணப்பங்கள் 2000—06—15 ஆம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக உதவிப்பதிவாளர், பரீட்சைகளும் அனுமதிகளும் கிளை, யாழ் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அல்லது நேரில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் "உடற்கல்வி டிப்ளோமா — கற்கைநெறிக்கான விண்ணப்பம்" என குறிப்பிடப்படுதல் வேண்டும். முறையாக பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

– பதிவாளர்

05—05—2000 (சி/12061)


## யுத்த நிலைப் பிரகடனத்தின் பாதிப்பு

# வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு ஐ. தே. க. குழு விளக்கமளிக்கும்

கொழும்பு, மே 8

நாட்டில் தற்பொழுது அமுல் செய்யப்பட்டுள்ள யுத்த நிலைப் பிரகடனம் குறித்தும் பொது மக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தினால் ஏற்படும் பாதக நிலை குறித்தும் ஐ.தே.கவினர் இலங்கையிலுள்ள வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு நேரில் சென்று விளக்கிக் கூறவுள்ளனர்.

நாட்டின் இன்றைய நிலை குறித்து வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு எடுத்துக் கூறுவதற்காக குழு ஒன்றினையும் கட்சியின் தலைமைப்பீடம் நியமனம் செய்துள்ளது

இக்குழுவில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மகிந்த சமரசிங்க, கருணாசேன கொடித்துவக்கு, டிரோன் பெர்னாண்டோ ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

இக்குழுவினர் இன்று முதல் வெளிநாட்டுத்தூதுவர்களைச் சந்தித்து இது தொடர்பாக விளக்கிக் கூறவுள்ளதுடன் தமது கட்சியின் எதிர்ப்பையும் தெரிவிக்கவுள்ளனர்.

(ஐ-5-4)

## விநியோகம்

சண்டிலிப்பாய், மே 8

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகத்தில் சைக்கிள் வாகன உரிமத் தகடுகள் தற்போது விநியோகிக்கப்பட்டு வருகின்றன. ஐந்து ரூபா செலுத்தி இதனை பெற்றுக்கொள்ள முடியும் என்று அலுவலக பொறுப்பதிகாரி தெரிவித்தார். (ஐ–135)

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மே 8

யாழ். உதைபந்தாட்ட லீக் நடத்தி வரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டிகள் அனைத்தும் குடாநாட்டின் தற்போதைய சூழ்நிலை காரணமாக காலவரையறை இன்றிப் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ–6)

## நிவாரணப் பொருள் விநியோகம்

திருநெல்வேலி, மே 8

நல்லூர் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் 86 ஆம் இலக்க 'ஏ' 'பி' புள்ளிகளுக்கு பட்டியல் மூலம் இடம்பெயர்ந்தோருக்கான உலர் உணவு நிவாரணப் பொருள்களை இன்று திங்கட்கிழமை தொடக்கம் வழங்கவுள்ளது. இம்முறை நிவாரணத்திற்கு பா வழங்கப்படமாட்டாது என்றும் — அரிசி, சீனி, பால்மா ஆகியன வழங்கப்படுமென்றும் சங்கத்தின் தலைவர் பெ. கனகசபாபதி தெரிவித்தார். (ஐ-135)

## சம்பள உயர்வு

திருநெல்வேலி, மே 8

நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பணியாற்றும் கூட்டுறவுப் பயிற்சியைப் பெற்ற பணியாளர்களுக்கு மூன்று வருடாந்த சம்பள உயர்வுகளை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலையிலுள்ள வடக்கு — கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளரின் சிபார்சுக்கிணங்க இவர்களுக்குக் கடந்த வருடம் முதலாம் திகதி தொடக்கம் இந்த மூன்று ஊக்குவிப்பு வருடாந்த சம்பள உயர்வு வழங்கப்படவிருப்பதாக சங்கத்தலைவர் பெ. கனகசபாபதி தெரிவித்தார்.

(ஐ-135)


## ○ வாழ்த்துகின்றோம் ○

யா/தொண்டமானாறு

**வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம்**

**க.பொ.த. (சா/த) பரீட்சை**

1999

க. பொ. த. (உ/த) தகுதி பெற்றோர்

7D உடன் ஒருவர் - தி. சசிகலா
5D உடன் ஒருவர் - தி. விஜயதிலகம்
4D உடன் 2 பேர் - சு. ஜலரம்பை, பா. பவித்திரா
2D உடன் 3 பேர் - பு. தினேஷ்குமார், து. வையந்தி, உ. ராகவன்
D உடன் 4 பேர் - ம.அனந்தினி, வீ.சிவரஞ்சினி, த. நிருஜா, தி. சசிரேகா
சித்தி பெற்ற ஏனையோர் 6 பேர் - ந. சாந்தகுமார், இ. நிர்மலா, பி. ரதன், ஜெ. சுகிர்தா, இ. சுதர்சினி, ச. சசிகலா.

பரீட்சைக்குத் தோற்றியோர்: 37 பேர், உயர்தர தகுதி பெற்றோர்: 17

மேற்படி மாணவர்களையும், தொடர்ந்து உயர்ந்த பெறுபேறுகள் கிடைப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்டுக் கொண்டிருக்கும் அதிபர், ஆசிரியர்களையும் மனமார வாழ்த்துகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பெற்றோர்கள்.

யா/தொண்டமானாறு
வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம்.

(சி/12064)



## 61 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 15 — 06 — 1976

மறைவு 08 — 03 — 2000

**பாவிலுப்பிள்ளை சுரேஸ்**

(மண்டைதீவு)

நாவிலம் போற்ற நல்வாழ்வு வாழ்வாயென்று
நாம் நினைத்திருந்த நேரம் நெஞ்சில்
அம்பாகப் பாய்ந்ததன்ன!

நீ மறைந்த துயரச் செய்தி கேட்டு சகல விதத்திலும் ஆறுதல் கூறிய, உதவிகள் வழங்கிய அனைவருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றுக்காக இன்று (08–05-2000) திங்கட்கிழமை 10-00 மணிக்கு காட்டு சிந்தாத்துரை மாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். இதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.

3 ஆம் வட்டாரம்,
வேலணை.

(76664)



உ
சிவமயம்

சிறுப்பிட்டி மேற்கு

**ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தானம்**

# அலங்கார உற்சவம்

| | | | | |
|---|---|---|---|---|
| 08-05-2000 | திங்கள் | பிற்பகல் 6.00 மணிக்கு | — | உற்சவம் ஆரம்பம் |
| 15-05-2000 | திங்கள் | பிற்பகல் 6.00 மணிக்கு | — | வேட்டைத்திருவிழா |
| 16-05-2000 | செவ்வாய் | பிற்பகல் 5.00 மணிக்கு | — | சப்பறத்திருவிழா |
| 17-05-2000 | புதன் | முற்பகல் 11.30 மணிக்கு | — | தேர்த்திருவிழா |
| 18-05-2000 | வியாழன் | காலை 9.00 மணிக்கு | — | தீர்த்தத்திருவிழா |

அடியவர்கள் அனைவரும் இக்காலங்களில் ஆசாரசீலர்களாக வந்து எம்பெருமானை வழிபட்டு நீடூழிகாலம் வாழ்வீர்களாக!

உற்சவகால குரு:
**சிவஸ்ரீ சி. கிருஷ்ணசாமிக் குருக்கள்**
(புன்னாலைக்கட்டுவன்)

-பரிபாலனசபை.

(76674)

உதயன்

## மக்களின் பிரார்த்தனை

யாழ்ப்பாணத்தில் தற்போதுள்ள இராணுவச் சூழ்நிலையில் மேலும் பலர் அகதிகளாவதற்கு வாய்ப்புண்டு எனக் கவலை தெரிவித்திருக்கிறார் அகதிகளுக்கான ஐ.நா. தூதுவர் சதாக்கோ ஒகாதா.

போரில் ஈடுபட்டிருக்கும் இரண்டு தரப்பினரும் உக்கிரமாக மோதுவார்களேயானால் குடாநாட்டில் மேலும் அகதிகள் உருவாகுவர் என்பது ஒரு புறமிருக்க, ஆயிரக்கணக்கான குடிமக்கள் இடையில் அகப்பட்டு உயிரிழக்க நேரிடும் மிகவும் வேதனைக்குரிய நிலை தோன்றும்.

மக்கள் மிகவும் செறிந்து வாழும் பிரதேசம் குடாநாடு அதிலும் யாழ்ப்பாண நகரம் குடிமக்கள் அதிக எண்ணிக்கையில் மிக அடர்த்தியாக வாழும் பகுதி. மேலும் இராணுவ நிலையங்களும் காவலரண்களும் இங்கு நெருக்கமாக உள்ளன.

மோதல்கள் உக்கிரமடைந்தால் நிச்சயமாக மக்களின் தரப்பில் தான் உயிரழிவு அதிகமாக இருக்கும். 1995 பிற்பகுதியில் யாழ்ப்பாணத்தில் போர் உக்கிரமடைந்த வேளை, குடி மக்கள் இங்கு இருக்கவில்லை. முன்னரே இடம்பெயர்ந்துவிட்டார்கள், இம்முறையோ மக்கள் அவ்வாறு இடம்பெயர்ந்து செல்லக்கூடிய வாய்ப்பு இல்லை. பாதுகாப்பான இடமென்று கருதிச் செல்வதற்கு இடமிருக்காது. எல்லா இடங்களும், ஊர்களும் ஆபத்தான பிரதேசங்களாகவே இருக்கும்.

ஆகையால் போரில் ஈடுபட்டிருக்கும் இருதரப்புகளும் மக்களுக்கு ஏற்படக் கூடிய அழிவுகளையும் அவர்களுக்கு உண்டாகக் கூடிய அவலங்களையும் கருத்திற்கொண்டு மோதல்களைத் தவிர்க்க வேண்டும்; இதுவே இங்கு வாழும் மக்கள் ஒவ்வொருவரின் பிரார்த்தனையும் விருப்பமுமாக உள்ளது.

அகதிகளுக்கான ஐ. நா. தூதுவருக்கு உள்ள உணர்வும், மனித நேயமும் சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கும் பிறக்குமாயின் அது குடாநாட்டு மக்கள் செய்த பெரும் பாக்கியமாகவும் அதிர்ஷ்டமாகவும் அமையும்.

குடாநாட்டில் தற்போதுள்ள சூழ்நிலையைக் கருத்திற்கொண்டுவெளிநாட்டுத் தொண்டர்அமைப்புகளும் ஏனைய நிறுவனங்களும் இங்கிருந்து விலகிச் சென்று விடலாம் என்ற "அச்சம்" குடாநாட்டு மக்களிடம் பரவலாக வளர்ந்துள்ளது. கண்ணிவெடி அகற்றும் ஐ.நா. குழு இங்கிருந்து திரும்பியுள்ளமை இத்தகைய அச்சத்துக்குக் காரணமாகி உள்ளது.

இவ்வாறான வேளையில், யாழ்ப்பாணத்தில் செயற்படும் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகப் பணிக் குழுவினர் இங்கிருந்து வெளியேறாமல் மக்களுக்கு வேண்டிய பணிகளைச் செய்வர் என்று சதாக்கோ ஒகாதா கூறியிருப்பது குடாநாட்டு மக்களுக்கு ஓரளவு ஆறுதலைத் தந்திருக்கிறது.

எனினும், யாழ்ப்பாண மக்கள் மேலும் அகதிகளாக, இடம்பெயர்ந்தவர்களாக மாறாதிருக்கக் கூடிய ஒரு சூழ்நிலையைத் தோற்றுவிக்க வகை செய்யும் செயற்பாடுகளில் ஐ. நா. அமைப்புகள் ஈடுபடுமாயின் மக்கள் பெரிதும் நன்றி உடையவர்களாக இருப்பர். இப்போதுள்ள ஆபத்தான நிலை நீங்கி சமூக நிலை தோன்றுவதற்கு எல்லாத்தரப்புகளின் உதவியும் கிடைப்பதாக.

# உலகெங்கும் கிளை பரப்பி நிற்கும் மாபெரும் மனிதாபிமான நிறுவனம்

உலக செஞ்சிலுவை தினம் இன்றாகும். அதனை ஒட்டி இக் கட்டுரை வெளியாகின்றது.

1828 ஆம் ஆண்டு மே மாதம் எட்டாம் நாள் சுவிஸ் நாட்டில் பிறந்த ஹென்றி டுனான்ற் (Hentry Dunant) என்பவரே இன்று உலகளாவிய ரீதியில் இயங்கி அளப்பரிய சேவையாற்றிக்கொண்டிருக்கும் செஞ்சிலுவை அமைப்பின் தோற்றத்திற்கு காரணகர்த்தாவாவார். 1859 ஆம் ஆண்டு 'சொல்ஃபரினோ' என்னும் கிராமத்தில் இத்தாலிக்கும் பிரான்சுக்குமிடையே நடந்து கொண்டிருந்த யுத்தத்தைக் கண்ணுற்ற இவர் அந்த நேரத்திலிருந்து செயற்படத் தொடங்கியதன் பயனாகவே செஞ்சிலுவைச் சங்கம் என்ற அமைப்பு தற்சமயமும் சிறப்பாக இயங்கக்கூடியதாகவுள்ளது. 1862 ஆம் ஆண்டு 'சொல்ஃபரினோவின் அனுபவங்கள்' என்ற புத்தகத்தில் தான்கண்ட பல்வேறு அனுபவங்களையும், யுத்த களத்தில் ஆற்றிய சேவைகளையும், விளக்கி இவர் எழுதியிருந்தார். 1863 ஆம் ஆண்டு தன்னுடன் மேலும் நான்கு ஜெனிவா பிரஜைகளையும் இணைத்து ஒருகுழுவாக இயங்கியதுடன், 1864 இல் தமக்கென ஒரு சின்னத்தையும் தெரிவு செய்தார். வெள்ளைநிறப் பின்னணியில் சிவப்புச் சிலுவையே இவர்களினால் தெரிவு செய்யப்பட்ட சின்னமாகும். இச்சின்னத்தை தற்சமயம் பன டோல்விற்கும் கடைதொடக்கம் வைத்தியசாலைகள், மற்றும் பல்வேறு வாகனங்கள் வரை பாவித்து வருகின்றனர். இதனை செஞ்சிலுவை அமைப்பு உலகளாவிய ரீதியில் முறையற்ற செயலெனத் தெரிவித்து, அவ்வாறு இச்சின்னத்தைப் பாவிக்க வேண்டாமெனக் கேட்டும் வருகின்றது. 1876 ஆம் ஆண்டு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமென இக்குழுவே பரிணமித்து இயங்கத் தொடங்கியது. அராபிய நாடுகளில் செம்பிறைச் சின்னத்தையும் இணைத்து இயங்க ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இராஜதந்திர்கள் ஒன்று கூடி யுத்தகளத்தில் காயமுறுபவர்களின் நலன்களைப் பேண முதலாவது ஜெனிவா சாசனத்தை (Geneva Convention)ஏற்றனர். அதன்பின்னர் மூன்று முறை ஜெனிவா சாசனம் செய்யப்பட்டு மொத்தமாக நான்கு சாசனங்கள் உள்ளன. இச்சாசனங்களால் கீழ்க்காணும் வகையைச் சார்ந்தோர் பாதுகாக்கப்படுகின்றனர்.

★ களத்தில் காயமுற்ற அல்லது சுகவீனமுற்றவர்கள்.

★ கடலில் காயமுற்ற அல்லது சுகவீனமுற்ற அல்லது தத்தளிக்கும் வீரர்கள்.

★ போர்க் கைதிகள்.

★ ஆயுதப் போரில் சிக்கிய குடிமக்கள்.

ஜெனிவா சாசனங்களில் 188 நாடுகள் அதனை ஏற்றுக் கையொப்பமிட்டுள்ளன. இலங்கையும் இதிலொன்றாகும். 150 நாடுகளைச் சேர்ந்த ஏறத்தாழ 130 ஆயிரம் மில்லியன் அங்கத்தவர்கள் உள்ளனர். தற்சமயம் 55 நாடுகளில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுசிறப்பாக இயங்கிச்சேவையாற்றி வருகின்றது.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு யுத்தம் நடைபெறும் நாடுகளில் அல்லது இயற்கை அனர்த்தம் நடைபெறும் போது அந்நாட்டு அரசாங்கம் அழைத்தால் மட்டுமேஅங்கு சென்று சேவையாற்ற முடியும். சேவையாற்றும் போது அந்தந்த நாட்டின் சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட்டே செயற்படமுடியும். தலைமையலுவலகம் ஜெனிவா நகரில் இயங்குகிறது. இது ஓர் அரசியல் சார்பற்ற, சுதந்திரமான, மனிதாபிமான ஸ்தாபனமாகும். இச்சங்கத்தில் உள்ள ஏழு கோட்பாடுகளும் பின்வருமாறு:-

**உலக செஞ்சிலுவைத் தினம் இன்று**

1. மனிதாபிமானம் (Humanity)
2. பாரபட்சமின்மை (Impartiality)
3. நடுநிலமை (Neutrality)
4. சுயாதீனம் (Independence)
5. தொண்டர் சேவை (Voluntary Service)
6. ஒருமைப்பாடு (Unity)
7. உலகளாவியதன்மை (Universality)

இலங்கைக்கு இச்சங்கம் 1989 இல் இலங்கை அரசின் அழைப்பை ஏற்று வருகை தந்தது. 1990 இல் வடக்கு—கிழக்கு மாகாணத்தில் தனது கிளை அலுவலகங்களைத் திறந்து சேவையாற்றி வருகின்றது.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு இக்காலப் பகுதிகளில் செய்யும் பணிகளில் சில வருமாறு:-

★ மோதல்கள்நடைபெறும் பகுதிகளில் வாழும் பொது மக்கள் மற்றும் காயமடைந்தோர், கைது செய்யப்பட்டோருடன் கௌரவத்துடன் நடந்து கொள்ள வேண்டியது பற்றி போரில் ஈடுபடுவோருக்கு நினைவூட்டி வருதல்.

★ கலவரங்கள் தொடர்பாககைது செய்யப்பட்டு சிறையில் உள்ளோரைப் பார்வையிட்டு வருகின்றனர். கைதிகள் காணாமற் போதல், அவர்களுக்கு துன்புறுத்தல்கள் மற்றும் சித்திரவதைகள் இடம்பெறா வண்ணம் தடுக்க இப்பார்வையிடல்கள் உதவுகின்றன.

★ மோதல்கள் நடைபெறுகின்ற சூழ்நிலைகளினால் பிரிந்து போகும் குடும்ப அங்கத்தவர்களிடையே தொடர்புகளை மீண்டும் ஏற்படுத்த செஞ்சிலுவைச் செய்தித் தொடர்பினைஏற்படுத்துதல்

★ யுத்தத்தினால் ஏற்படுகின்ற சுகாதாரச் சீர்கேடுகளைக் கருத்திற் கொண்டு மருத்துவ வசதிகளைச் செய்து கொடுத்தல்.

★ செஞ்சிலுவைச் சங்கக் கப்பல் மூலம் அவசர நோயாளர்களை யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பிற்கும், கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கும் அழைத்துச் செல்லல். அத்துடன் யாழ். மாவட்டத்திற்குத் தேவையான மருந்துப் பொருள்களையும் மற்றும் அத்தியாவசியப் பொருள்களையும் எடுத்து வந்து வைத்தியசாலை நிர்வாகத்திற்கு உதவுகின்றது. தபாற்சேவையுட்பட வேறுபல சேவைகளையும் செய்து வருகின்றது.

★ இடம்பெயர்ந்த வேளைகளிலும் யுத்த சூழ்நிலைகளிலும் உணவு, குடி தண்ணீர், சமையற்பாத்திரங்கள் வழங்கல், தற்காலிக குடிசை அமைத்துக்கொடுத்தல் போன்ற உதவிகளைச் செய்தல்.

★ போரில்ஈடுபடுவோருக்கு பொதுமக்கள் மற்றும் காயமடைந்தோர், கைது செய்யப்பட்டோருடன் கடைப்பிடிக்க வேண்டிய அறிவுரைகளை வழங்குவதுடன் தமது கொள்கைகள், பணிகள் பற்றியும் விளக்குகின்றனர்.

**தி. உதயசூரியன்**
(கௌரவ பொருளாளர், இ செ. சி. சங்கம், யாழ். கிளை.)

ஒவ்வொரு நாட்டிலும் ஒரு செஞ்சிலுவைச் சங்கமே இயங்க முடியும். இதனை தேசிய சங்கம் (National Society) என்பர். ஆனால் இச்சங்கம் தனது கிளைகளை நாடளாவிய ரீதியில் வைத்துச் செயற்படமுடியும். இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் 1936 ஆம் ஆண்டு பிரித்தானிய செ.சி. சங்கத்தின் கிளையாக முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்டது. 1949 ஆம் ஆண்டு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கமெனவும் 1972 ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா செஞ்சிலுவைச் சங்கமெனவும் பெயர் மாற்றம் செய்யப்பட்டு இயங்கி வருகின்றது 1952 இல் உலகில் மிகப் பெரிய மனிதாபிமானப் பணிபுரியும் அமைப்பான சர்வதேச சம்மேளனத்துடன் (International Federation Red Cross - (FRD) இணைந்து அங்கத்துவம் பெற்றது. சம்மேளனம் உலகில் இயங்கும் தேசிய சங்கங்களுக்கு வேண்டிய அனுசரணைகளையும் ஆலோசனைகளையும் நிதி வசதிகளையும் செய்து கொடுப்பதுடன் தேசிய சங்கங்களின் வழிகாட்டியாகவும் இயங்குகின்றது. இதன் இலங்கைக்கான அலுவலகம் கொழும்பில் இயங்குகின்றது. இதன் தலைமையகம் சுவிற்சர்லாந்தில் உள்ளது.

தேசிய சங்கங்களும் ஏழு அடிப்படைக் கோட்பாடுகளுக்கு அமைவாகவே செயற்படுகின்றன. தமது சேவைகளைப் பாரபட்சமின்றி மனிதாபிமானத்துடன் கலவரங்களினாலும் இயற்கை அழிவுகளினாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சேவையாற்றி வருகின்றது.

நாடளாவிய ரீதியில் இ. செ. சி. சங்கம் கடந்த 63 வருடங்களாக ஆற்றிய சேவைகளைக் கீழ்க்காணும் முறையில் பட்டியற்படுத்தலாம்.

1. தேசிய வைபவங்கள், சமய மற்றும் விளையாட்டு நிகழ்வுகளின்போது முதலுதவி அளித்தலும் அரசாங்க, தனியார், செஞ்சிலுவைச் சங்க அங்கத்தவர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோருக்கு முதலுதவிப் பயிற்சி அளித்தல்.
2. அனர்த்தங்கள் நடைபெறும் வேளைகளில் உதவல்.
3. நிவாரண உதவிகள் வழங்கல்.
4. கடிதச் சேவை, காணாமற் போனோரைத் தேடுதல்.
5. அம்புலன்ஸ் சேவை (இறந்த மற்றும் காயமடைந்தவர்களைக் கொண்டு செல்ல வாகன வசதியளித்தல்).
6. இரத்ததான நடவடிக்கை.
7. சுகாதார சேவை.
8. சிரமதானப் பணிகள்.
9. சுயதொழில் முயற்சிகள்.
10. ஆரம்ப சுகாதார சேவை.

செஞ்சிலுவை அமைப்பில் மூன்று அமைப்புக்கள் சமமான அந்தஸ்துடன் செயற்படுகின்றன. தேசிய சங்கம், சம்மேளனம், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு என்பனவையாகும்.

சேவை மனப்பான்மையுள்ள எவரும் இச் சங்கத்தில் அங்கத்தவராக இணைந்து கொள்ள முடியும்.

எமது பகுதி மக்களுக்குச் சேவைசெய்ய நாமும் ஓர் அங்கத்தவராக இணைவோமாக!

'உங்களுக்கு உதவ எங்களுக்கு உதவுங்கள்' ★

**நாளை**
சித்திரை 27
செவ்வாய்க்கிழமை
திதி: ஷஷ்டி
முன்இரவு 8.59 வரை.
நட்சத்திரம்: புனர்பூசம்
பிற்பகல் 2.04 வரை.
ஷஷ்டி விரதம்
சுபநேரம்: 10.24 11.54
ராகுகாலம்: 2 54 4.24
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

**உதய வாக்கு**
அனைத்து மதத்தினரும் சகோதர பாசத்துடன் சேர்ந்து வாழ வேண்டும்
- குருநானக்

## 9 யாழ். கலைஞருக்கு 'கலாபூஷணம்' விருது

நாட்டில் பல்வேறுதுறைகளிலும் சிறந்த சேவையாற்றிய கலைஞர்களுக்கு கலாசார, சமய பண்பாட்டலுவல்கள் அமைச்சு ஆண்டுதோறும் வழங்கி வரும் 'கலாபூஷணம்' விருதுகளைப் பெறுவோர் விபரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்த ஆண்டு 28 தமிழ்க் கலைஞர்களுக்கு இந்த விருது வழங்கப்படவுள்ளது. இவர்களில் 9 பேர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தோராவர். அவர்களின் விவரம் வருமாறு:—

★ இராசு சுந்தரமூர்த்தி— நாதஸ்வரம்.

★ கனகசபை சிவகுருநாதன் — நாடகம்.

★ சீனித்தம்பி நடராஜா — ஓவியம்.

★ சுப்பையா கணபதிப்பிள்ளை— கர்நாடக இசை.

★ சுப்பிரமணியம் இராசரத்தினம் சிற்பம்.

★ கந்தையா பாலசிங்கம் — நாடகம்.

★ நல்லையா செல்வராஜா — நாடகம்.

★ கந்தையா சந்திரவேலு —கர்நாடக இசை.

★ பசுபதி இரத்தினம் செல்வராஜா — மிருதங்கம்.

(ஐ—6)

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

நடராசா ஞானசேகரன் என்பவருடைய தே. அ. அ. (இல. 742561283v), வி. அ. அ. (இல. 0901613237) என்பன கஸ்தூரியார் வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் சூட்டி இரும்புத் தொழிற்சாலை, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

(76084)

### விற்பனைக்கு

புதிய Sony Radio (200W) விற்பனைக்குண்டு தொடர்பு: கண்ணன், இல. 109/6, 6 ஆம் ஒழுங்கை, பலாலி வீதி, ஆலடிச்சந்தி திருநெல்வேலி தெற்கு. (சி/12060)

புதிய National J-11 டெக் (ஜப்பான் தயாரிப்பு) விற்பனைக்கு உண்டு. இல 396, உதயன் பழைய பணிமனை ஒழுங்கை, கைலாசபிள்ளையார் கோயிலடி, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(76062)

### O/L MATHS

ஆரம்ப அறிவேயில்லாதவர்களுக்கும், இதுவரை சித்தியடையாதவர்களுக்கும் 35 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்கள் Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். க. ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. (76071)

### பொய்யாமொழி ஜோதிடம்

மாவை கொல்லங்கலட்டிப் பிள்ளையார் கோயில் திருவிழாக் காரணமாக 20 - 05 - 2000 வரை நல்லூர், மல்லாகம் சோதிட நிலையங்கள் மூடியிருக்கும் என்பதையும் மீண்டும் 23ஆம் திகதியில் இருந்து சந்திக்கலாம் எனவும் அறியத் தருகின்றோம். (76078)

## புதிய நூல்கள் அன்பளிப்பு

சண்டிலிப்பாய், மே 8

பண்டத்தரிப்பு — மாதகல் பிரதான வீதியில் உள்ள கட்டடத்தில் இயங்கி வரும் வலி. தென்மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகத்தின் நூல் நிலையத்திற்கு 200 புதிய நூல்களை வலி. தென்மேற்கு பிரதேசசபை அண்மையில் வழங்கியுள்ளது.

இந்த நூலகத்தில் ஜி. சி. ஈ. சாதாரண, உயர்தர கடந்த கால வினா, விடை மற்றும் பாடப் புத்தகங்களும் உள்ளதாகவும் இப் பகுதி உயர் வகுப்பு மாணவர்கள் நேரில் வந்து இவற்றைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் உப அலுவலகப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (ஐ-135)

## பாடசாலைகளில் கொண்டாட்டங்கள் நடத்தத் தடை

கொழும்பு, மே 8

தொடரும் யுத்த நிலைமையைக் கருத்திற்கொண்டு நாட்டிலுள்ள அரச பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், கல்விநிறுவனங்கள் என்பவற்றில் கொண்டாட்டங்கள், கலை நிகழ்வுகள், கண்காட்சிகள் ஆகியவற்றை நடத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதற்கான உத்தரவை கல்வி, உயர் கல்வி அமைச்சு விடுத்துள்ளது. நாட்டின் யுத்தத் தயார் நிலை முடிவடையும் வரை இந்தத் தடை அமுலில் இருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-6)

# வெளி உதவி பெற்றாவது புலிகளை ஒழிக்க வேண்டும்

## சமசமாஜக் கட்சி தெரிவிப்பு

வெளிநாட்டு உதவிகளைப் பெற்றாவது போரில் புலிகளை ஒழித்துக் கட்டுவது அரசின் முக்கிய கடமையாகும் என்று லங்கா சமசமாஜக் கட்சி தெரிவித்துள்ளது.

நாட்டை யுத்த நிலையில் வைத்திருப்பது என்று அரசு எடுத்த முடிவை வரவேற்று அக்கட்சி வெளியிட்ட அறிக்கையில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

வடபகுதியில் யுத்தத்தையே இலக்காகக் கொண்ட சில குழுக்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதும் அரசின் பொறுப்பாகும். அதே சமயம் இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வுகாணும் முயற்சியில் இருந்தும் அரசு விலகக்கூடாது. அரசாங்கம் தற்போது மேற்கொண்டு வரும் யுத்த நடவடிக்கைகளுக்கு சகலரும் பூரண ஆதரவு வழங்க வேண்டும் என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ 6)

## சூட்டுக் காயங்களுடன்

# மட்டு. ஆஸ்பத்திரியில் அனுமதித்த ராசிக்குழு உறுப்பினரைகாணோம்

மட்டக்களப்பு, மே 8

மட்டக்களப்பு வைத்தியசாலையில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் கடந்த வெள்ளிக்கிழமை இரவு அனுமதிக்கப்பட்ட ராசிக்குழு உறுப்பினர் ஒருவர் காணாமற் போய்விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மாசிலாமணி வினோதன் (வயது 24) என்ற இந்த இளைஞன் வாழைச்சேனை கடதாசி ஆலை வளாகத்திலுள்ள இராணுவ முகாமில் கடமையாற்றி வந்தவர்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபின் அவர் பொலீஸாருக்கு அளித்துள்ள வாக்கு மூலத்தில் தன்னை மட்டக்களப்பு வாவிக்கு அருகிலுள்ள துணைப்படை அலுவலகத்தில் வைத்து அதன் பொறுப்பாளர் தாக்கியதாகவும் பின்னர் துப்பாக்கியால் சுட்டதாகவும் தெரிவித்துள்ளார். (ஐ-5-4)


யா/புங்குடுதீவு

ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம்

பழைய மாணவர் சங்க

## அங்குரார்ப்பண பொதுக்கூட்டம்

இடம்: பாடசாலை மண்டபம்

காலம்: 14-05-2000 ஞாயிறு காலை 10மணி.

சகல பழைய மாணவர்களையும் மேற்படி கூட்டத்தில் பங்குபற்றுவதோடு சங்க உறுப்பினராக இணையுமாறு அன்புடன் அழைக்கின்றேன்.

30-04-2000 (76065) - அதிபர்



யா/ ஸ்ரீ சோமாஸ்கந்தக்கல்லூரி - புத்தூர்

## நூலக வாரம் - 2000

காலம்:- 08 - 05 - 2000 - 14 - 05 - 2000

கல்லூரியின் நூலகத்தைக் கட்டியெழுப்பக் கல்லூரிச் சமூகத்தின் பூரண ஒத்துழைப்பை எதிர்பார்த்து நிற்கின்றோம்.

மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் நூலக வாரத்தில் தங்களால் இயன்றளவு நூல்களை வழங்கியுதவுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நூலக அபிவிருத்திக் குழு.

யா/ ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி, புத்தூர். (76083)



## முக்கிய அறிவித்தல்

பருத்தித்துறை

வர்த்தக சங்க எல்லைக்குட்பட்ட வர்த்தகர்களின் கவனத்திற்கு!

2000-05-06 ஆம் திகதி பருத்தித்துறை 524, படைப்பிரிவின் சிவில் நிர்வாகப் பொறுப்பதிகாரியினால் கூட்டப்பட்ட கூட்டத்தில் உதவித்தொழில் ஆணையாளரின் வேண்டுகோளுக்கு இணங்க சனிக்கிழமை பிற்பகல் 2. 00 மணிதொடக்கம் ஞாயிற்றுக்கிழமை முழு நேரமும் போயாவிடுமுறை நாள்களிலும் வர்த்தக வங்கி விடுமுறை நாள்களிலும் கடைகளை மூடும்படி கூறியதற்கு இணங்க, சிவில் நிர்வாக அதிகாரியினால் எமது சங்கத்திற்குப் பணிப்புரை வழங்கப்பட்டது. எனவே இவ்விடயத்தை சகல வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கும் தெரிவிக்கின்றோம்.

நிர்வாகம்

வர்த்தக சங்கம்,

பருத்தித்துறை.

(சி/12077)


# சமய சந்நிதிகளில்

நெடுந்தீவு, மே 8

அனலைதீவு ஸ்ரீ எழுமங்கை மனோன்மணி (நாச்சிமார்) அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று திங்கட்கிழமை நண்பகல் 12மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்துத் தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் காலை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (க-111)

★ ★ ★

கொழும்புத்துறை, மே 8

கொழும்புத்துறை மேற்கு அருள்மிகு ஸ்ரீ வதரிபீட மன்றுளாடும் விநாயகர் கோயிலின் வருடாந்த மஹோற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.45 மணிக்கு வசந்த மண்டபப் பூசையை அடுத்து 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

தேர்த்திருவிழா எதிர்வரும் 17 ஆம் திகதி புதன்கிழமை காலை 6 மணிக்கும் தீர்த்தத் திருவிழா மறுநாள் காலை 8 மணிக்கும் இடம்பெறும். (ஐ-30)

★ ★ ★

யாழ்ப்பாணம், மே 8

உசன் கந்தசாமி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

★ ★ ★

யாழ்ப்பாணம், மே 8

சண்டிலிப்பாய் ஆலங்குளம் முருகமூர்த்தி ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று திங்கட்கிழமை காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

எதிர்வரும் 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் காலை 11 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (க)

★ ★ ★

கொழும்புத்துறை, மே 8

கொக்குவில் கிருபாகர அருள்மிகு ஸ்ரீசிவசுப்பிரமணியர் திருக்கோயிலின் வருடாந்த உற்சவம் இன்று திங்கட்கிழமை பகல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத்தினங்கள் நடைபெறும்.

தேர்த்திருவிழா எதிர்வரும் 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலையும் தீர்த்தத் திருவிழா மறுநாள் புதன்கிழமையும் நடைபெறும். (ஐ-30)

★ ★ ★

கொழும்புத்துறை, மே 8

அராலி ஆவரம்பிட்டி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் திருக்கோயிலின் வருடாந்த உற்சவம் எதிர் வரும் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து ஒன்பது தினங்கள் நடைபெறும்

எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை காலை விசேட அபிஷேகம், பூசையுடன் பெரும் பொங்கலும் இடம்பெறும்.

(ஐ-30)

★ ★ ★

யாழ்ப்பாணம், மே 8

நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

எதிர்வரும் 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்குத் தேர்த் திருவிழாவும் மறுநாள் பிற்பகல் 12 45 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

ஆலய வெளி மண்டபத் திறப்பு விழா இன்று காலை 7 மணிக்கு நடைபெறும். (க)

★ ★ ★

கொழும்புத்துறை, மே 8

திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் திருக்கோயிலின் வருடாந்த உற்சவம் கடந்த 3 ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து 15 தினங்கள் உற்சவம் நடைபெறும்.

தேர்த்திருவிழா எதிர்வரும் 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறும். மறுநாள் பூரணை தினம் காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவமும், மாலை 4 மணிக்கு திருவூஞ்சலை அடுத்து கொடியிறக்கமும் இடம்பெறும்.

(ஐ-30)

★ ★ ★

தென்மராட்சி, மே 8

சரசாலை நுணுவில் சிதம்பர விநாயகர் ஆலய மகோற்சவம் இன்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 16 ஆம் திகதி தேர் உற்சவமும் 17 ஆம் திகதி தீர்த்த உற்சவமும் நடைபெறும்.

உற்சவ காலத்தில் தினமும் மாலையில் கூட்டுப் பிரார்த்தனையும் சமயச் சொற்பொழிவும் இடம்பெறவுள்ளன

(க-117)

★ ★ ★

கொழும்புத்துறை, மே 8

கோண்டாவில் தில்லைம்பதி அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் கோயிலின் புதிய இராஜகோபுரத்திற்கான அங்குரார்ப்பண வைபவம் இன்று முற்பகல் 11.54 மணிக்கு பூசையை அடுத்து நடைபெறும்.

(ஐ-30)

★ ★ ★

கொழும்புத்துறை, மே 8

கந்தரோடை அருள்மிகு ஸ்ரீ அருளானந்த விநாயகர் திருக்கோயிலின் வருடாந்த மகோற்சவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து 16 தினங்கள் உற்சவம் நடைபெறும்.

தேர்த்திருவிழா 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பகலும், தீர்த்தத் திருவிழா மறுநாள் புதன்கிழமை பகலும் இடம்பெறும்

(ஐ-30)

★ ★ ★

யாழ்ப்பாணம், மே 8

அளவெட்டி கும்பிளாவளைப் பிள்ளையார் கோயில் வருடாந்த மகோற்சவம் இன்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 12 தினங்கள் தொடர்ந்து நடைபெறும்.

எதிர்வரும் 17 ஆம் திகதி தேர் உற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

உற்சவகாலத்தில் பிற்பகல் 6 மணி தொடக்கம் 7 மணி வரை சானகதாவாரிதி பிரம்ம ஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மா 'கம்பராமாயணம்' பற்றி தொடர் சொற்பொழிவாற்றுவார்.

(ச-29)

★ ★ ★

யாழ்ப்பாணம், மே 8

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் வருடா வருடம் நடைபெறும் சித்திரை திருவாதிரை நட்சத்திர திருஞானசம்பந்தர் சுவாமிகள் விழா இன்று திங்கட்கிழமை முதல் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

இந்த நாள்களில் பிற்பகல் 5. 30 மணிக்கு பூஜை வழிபாடுகளும் பிற்பகல் 6 மணிக்கு சிவன் கோவிலில் உற்சவமும் இடம்பெறும்.

(ச)

# யுத்தப் பாதிப்பில் இருந்து பொதுமக்களைக் காப்பாற்ற சிவில் பாதுகாப்புக் குழுக்கள்

## தொழிற் சங்க மட்டத்தில் அமைக்க நடவடிக்கை

கொழும்பு,மே8

யுத்தப்பாதிப்பில் இருந்து மக்களைப் பாதுகாக்க தொழிற்சங்கங்களின் மட்டத்தில் சிவில் பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கப்படவிருக்கின்றன.

இதற்கான ஆரம்ப வைபவம் ஜனாதிபதி தலைமையில் நாளை மறுதினம் புதன்கிழமை நடைபெறவிருக்கின்றது.

இந்தக் குழுக்களை அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள தொழில் அமைச்சர் டபிள் யூ.டி.சி.செனவிரத்ன தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக்குழுவில் உள்ளூராட்சி அமைச்சர் அலவி மௌலானா, நாடாளுமன்ற உறுப்பினர் ராஜா கொலுரே ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

இந்தக் குழுவினர் சகல திணைக்களங்களினதும் தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகளுடன் தற்போதைய நிலைமை குறித்து விளக்கம் அளிக்கவிருக்கின்றனர். (இ-க-3)

# பலியான, காணாமற்போன படையினர் குடும்பத்துக்கு உதவ அரசு நடவடிக்கை

கொழும்பு,மே8

யுத்தத்தின் போது காணாமற்போன மற்றும் உயிரிழந்த படையினரின் குடும்பங்களின் நலன் கருதி அவர்களுக்குப் பல திட்டங்களை அரசு நடைமுறைப்படுத்தவிருக்கின்றது.

காணாமற்போன படையினரின் உறவினர்களின் அமைப்பு அரசுக்கு எதிராகப் போராட்டம் நடத்தி வருவதை அடுத்து அரசு இந்தத் திட்டங்களை நடைமுறைப்படுத்தவிருக்கின்றது.

அரச நாடாளுமன்ற உறுப்பினர் ஹேரத் இது தொடர்பான திட்டங்களை வகுத்துள்ளார்.

அதே சமயம் - நீதி, அரசமைப்பு விவகார பிரதி அமைச்சர் டிலான் பெரேரா படையினரின் குடும்பங்களுடன் கலந்துரையாடி அவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளார். (இ-க-3)

# இலங்கைக்கு வெளிநாட்டு ஆயுதங்கள் கிடைப்பதை இந்தியா தடுக்கவேண்டும்

## தமிழர்பூமிக்கட்சித் தலைவர் அறிக்கை

சென்னை,மே8

இலங்கை அரசுக்கு வெளிநாட்டு ஆயுதங்கள் கிடைப்பதை இந்திய அரசு தடுக்க வேண்டும்.

இவ்வாறு முன்னாள் அமைச்சரும் தமிழர்பூமிக் கட்சியின் தலைவருமான கு.பா.கிருஷ்ணன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை இராணுவத்துக்கும் இடையில் இடம்பெறும் சண்டையில் இலங்கைக்கு ஆதரவாக வெளிநாட்டு இராணுவமோ ஆயுதங்களோ கிடைக்காமல் இருக்க இந்தியா உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

திருகோணமலையில் பிறநாட்டினர் இராணுவத்தளம் அமைக்காமல் இருக்க இந்தியா அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும். தேவைப்பட்டால் இந்திய கடற்படைக் கப்பல்கள் இலங்கையைச் சுற்றி நிறுத்தப்பட்டு வெளிநாட்டுப் படைகள் மற்றும் ஆயுதங்கள் இலங்கைக்குச் செல்லாமல் கண்காணிக்க வேண்டும் - இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-க-3-5)

### இடம்பெயர்வு

தென்மராட்சியில் கொடிகாமம், மிருசுவில், உசன் ஆகிய பகுதிகளில் இருந்து பொதுமக்கள் தொடர்ந்து இடம்பெயர்ந்து வருகின்றனர்.

படையினரின் முகாம்களுக்கு அருகில் உள்ள பொதுமக்களே கூடுதலாக இடம்பெயர்ந்து வருகின்றனர். (இ-133)

# உள்நாட்டுப் பிரச்சினை என்றாலும் வெளிநாட்டுச் சிக்கல்கள் உள்ளன

## இலங்கை நிலைவரம் குறித்து மூப்பனார் கருத்து

சென்னை,மே8

இலங்கைப் பிரச்சினை உள்நாட்டுப் பிரச்சினையாக இருந்த போதும் வெளிநாட்டுச்சிக்கல்கள் அந்தப் பிரச்சினையில் உள்ளதால் இந்தியா அவதானமாக நடக்க வேண்டும். நாட்டின் பாதுகாப்பு பலவீனமடைய அனுமதிக்கக் கூடாது.

மேற்கண்டவாறு தமிழ் மாநிலக் காங்கிரஸ் தலைவர் ஜி.கே.மூப்பனார் தெரிவித்தார்.

திருச்சியில் நேற்றுச் செய்தியாளர்களிடம் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கைப் பிரச்சினை விடயத்தில் மத்திய அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை நல்லதொரு முடிவை நோக்கிச் செல்லும்.

பிரதமர் வாஜ்பாயைச் சந்திக்க முன்னர் தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் கட்சிகளுடனும் தமிழக முதலமைச்சர் கருணாநிதி ஆலோசித்திருக்க வேண்டும் என்றார். (இ-க-3)

# சகல கட்சிகளுடனும் வாஜ்பாய் தனித்தனியாக ஆலோசனை

## இன்றைய அனைத்துக்கட்சி மாநாட்டுக்கு முன்னோடியாக

புதுடில்லி,மே8

இலங்கையில் தற்பொழுது ஏற்பட்டுள்ள நெருக்கடி தொடர்பாக இந்திய அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஜனநாயக தேசிய முன்னணியில் அங்கம் வகிக்கும் சகல கட்சிகளுடனும் பிரதமர் வாஜ்பாய் தனித்தனியாக ஆலோசனை நடத்தி வருகிறார்.

தமிழக முதலமைச்சர் மு.கருணாநிதியுடன் ஆரம்பமான இந்தப் பேச்சுக்கள் வை.கோபாலசாமி உட்பட ஏனைய தலைவர்களுடன் தொடர்வதாகக் கூறப்படுகின்றது.

அனைத்துக்கட்சிகளுடனும் இன்று நடத்தவிருக்கும் பேச்சுக்களுக்கு முன்னோடியாக பிரதமர் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அதே சமயம் இலங்கை நிலைமையை எவ்வாறு சமாளிப்பது என்பது குறித்து தேசிய ஜனநாயகக் கூட்டணியின் கட்சிகளிடையே முழுமையான கருத்தொற்றுமை காணப்படுகின்றது என்று உள்துறை அமைச்சர் எல்.கே. அத்வானி கூறியிருக்கின்றார்.

நெருக்கடியைச் சமாளிக்க இந்திய அமைதிப்படையை அனுப்பும் வழியை இந்திய அரசு இப்போது பின்பற்றாது என்றும் அவர் தெளிவுபடக் கூறினார்.

இலங்கைக்கு இராணுவ உதவி வழங்கப்படமாட்டாது என்பதை ஏற்கனவே இந்திய அரசு தெளிவுபடுத்திவிட்டது. ஆயினும் மனிதாபிமான உதவி வழங்குவது பற்றி கோரிக்கை வரும்போது பரிசீலிக்கப்படும் என்று வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்சிங் கூறினார். (இ-க-3)

### இனந்தெரியாத நபர்கள் தாக்குதல்

வலிகிழக்கு,மே8

இரவுவேளை வீட்டுக்குள் புகுந்து இனந்தெரியாத நபர்கள் நடத்திய தாக்குதலால் இருபாலையைச் சேர்ந்த எஸ்.தனபால் என்பவர் படுகாயம் அடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் இருபாலை டச்சு வீதியில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

அன்றையதினம் இரவு அவரது வீட்டின் வாசலில் எவரோ வந்து கூப்பிட்டதாகவும் இவர் வெளியே வந்தபோது தடி, பொல்லு போன்றவற்றால் தாக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. (இ-180)

### தாக்குதலில் காயம்

யாழ்ப்பாணம்,மே8

மண்டான் குத்துக்கு இலக்காகிக் காயமடைந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக ஒருவர் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வரணி, குடமியன் பகுதியைச் சேர்ந்த மருசலீன் அன்ரன் (வயது 50) என்பவரே நேற்றுமுன்தினம் தாக்குதலுக்கு இலக்கானவராவார். (இ-9)

### பரீட்சை

யாழ்ப்பாணம்,மே8

1998 கல்வி ஆண்டுக்கான இளங்கலைமாணி பகுதி II பரீட்சைகள் யாவும் ஜூன் 10ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன என்று வெளிவாரிப் பரீட்சைகள் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (இ-10)

# தமிழீழம் அமைவதே சரியான தீர்வு இந்தியா அங்கீகரிக்க வேண்டும்

## ராமதாஸ் கோருகிறார்

சென்னை,மே8

தமிழீழம் அமைவதே சரியான தீர்வாக இருக்கும். எனவே தமிழீழ விடுதலைப் போராட்டத்தை இந்திய அரசு அங்கீகரிக்க வேண்டும்.

பாட்டாளி மக்கள் கட்சியின் அவசரச் செயற்குழுக் கூட்டத்தில் இவ்வாறான தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்தச் செயற்குழுக் கூட்டத்தின் பின்னர் செய்தியாளர்களிடம் பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுனர் தலைவர் ராமதாஸ் பேசுகையில் கூறியதாவது:-

இலங்கைப் பிரச்சினையில் ஐ.நா.சபை தலையிட்டு தனித் தமிழீழம் அமைய ஏற்பாடு செய்து இலங்கையில் நடைபெற்று வரும் விடுதலைப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும்.

இலங்கைக்கு ஒரு தலைப்பட்சமாக இஸ்ரேல் உதவக் கூடாது. பிறநாடுகளும் உதவ முன்வரக் கூடாது.

இலங்கை அரசுக்கு உதவ பாகிஸ்தான் இராணுவம் முன்வந்தால் விடுதலைப் புலிகளுக்கு உதவ இந்தியா முன்வரவேண்டும்.

இப்படி ராமதாஸ் தெரிவித்தார். (இ-க-3-5)

### இலங்கைக்கு உதவ வேண்டும் என்கிறார் குஜ்ரால்

புதுடில்லி,மே8

இலங்கை அரசுக்குத் தேவையான அனைத்து ஒத்துழைப்பையும் இந்தியா வழங்கவேண்டும் என்று முன்னாள் பிரதமர் ஐ.கே.குஜ்ரால் தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கைக்கு இராணுவத்தை அனுப்புவதில்லை என்று மத்திய அரசு எடுத்துள்ள முடிவுக்கான காரணத்தைத் தம்மால் புரிந்து கொள்ள முடிகின்றது என்றும் அவர் தெரிவித்தார். (இ-3-4)

# இந்தியாவின் எந்த முடிவும் பிராந்திய பாதுகாப்பைப் பாதிக்கக் கூடாது

## சிதம்பரம் கூறுகிறார்

சென்னை,மே8

இலங்கைப்பிரச்சினையில் மத்திய அரசு எடுக்கும் எந்தவொரு முடிவும் பிராந்தியப் பாதுகாப்பைப் பாதிக்கக்கூடாது என்று தமிழ் மாநிலக்காங்கிரஸின் மூத்த தலைவரும் முன்னாள் மத்திய அமைச்சருமான பா.சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

பிராந்திய பாதுகாப்பைப் பாதிக்காதபடி மத்திய அரசு எடுக்கும் முடிவை அனைத்து அரசியல்கட்சிகளும் வரவேற்க வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

இலங்கைப்பிரச்சினை தொடர்பாக தமிழக முதலமைச்சர் பிரதமருடன் பேச்சு நடத்தியதை வரவேற்றுள்ள சிதம்பரம் மத்திய அரசு எடுத்திருக்கும் முடிவு நல்லதெனக் கூறினார். (இ-க-3)

### வயோதிபர் விபத்தில் உயிரிழப்பு

யாழ்ப்பாணம்,மே8

கல்வியங்காடு மூன்றாம் கட்டையடியில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற மினிபஸ் - சைக்கிள் விபத்தில் சைக்கிளில் சென்ற வயோதிபர் ஒருவர் உயிரிழந்தார்.

கல்வியங்காடு, ஜி.பி.எஸ் றோட்டைச் சேர்ந்த பொ.இராசையா (வயது 70) என்பவரே உயிரிழந்தவராவார்.

தலையில் படுகாயமடைந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இவர் அவசர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் அங்கு உயிரிழந்தார். (இ-180-9)

### பதிய நடவடிக்கை

யாழ்ப்பாணம்,மே8

2001 கல்வி ஆண்டுக்கான புதிய மாணவர்களை வெளிவாரிப் பரீட்சைகள் பிரிவில் பதிவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அந்தப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (இ-10)

### திருத்த வேலைகள்

நெல்லியடி,மே.8

கரணவாய் வடக்கு கிராம சேவை அலுவலர் பிரிவிலுள்ள சக்களாவத்தை, நவிண்டில் பகுதிகளில் வீதி ஓரங்கள் செப்பனிடப்பட்டு வருகின்றன.

இப்பகுதியைத் துப்புரவு செய்து தருமாறு அண்மையில் உடுப்பிட்டியில் நடைபெற்ற நடமாடும் செயலகத்தில் முன் வைக்கப்பட்ட கோரிக்கையை அடுத்தே இத் திருத்த வேலைகளை கரவெட்டி பிரதேசசபை உப அலுவலகம் மேற்கொண்டுள்ளது. (இ-109)

### கைப்பை யாருடையது?

யாழ்ப்பாணம்,மே8

கோண்டாவில் பகுதியில் வீதியில் கண்டெடுக்கப்பட்ட கைப்பை ஒன்று உதயன் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தவறவிட்டவர்கள் உரிய அத்தாட்சிகளுடன் அடையாளம் காட்டி அதனை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

# மரண அறிவித்தல்கள்

## சின்னத்தம்பி சுப்பிரமணியம்

நல்லூரைப் பிறப்பிடமாகவும் சிறுப்பிட்டி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சுப்பிரமணியம் (மைனர்) 05.05.2000 வெள்ளிக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் பரமேஸ்வரியின் அன்புக்கணவரும் நாகராணி (கனடா), நாகேந்திரராசா, சிறீபாலராணி (கனடா) ஸ்ரீபாலகிருஸ்ணன் (ஜேர்மனி), சிறீகாந்தன் (ஹொலண்ட்), சிறீதரன் ஆகியோரின் தந்தையாரும் பாலசிங்கம் (கனடா), மனோகரன் (கனடா) தர்சினி (ஹொலண்ட்) பார்வதி ஆகியோரின் மாமனாரும் கேதீஸ், கேசவன், சுஜீகரன், மதுரிக்கா (கனடா) மூலானி (ஹொலண்ட்) அனுஷா, ஜமுனா, சத்தியா, டயானி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 06.05.2000 சனிக்கிழமை சிறுப்பிட்டி குடும்பமயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிறுப்பிட்டி வடக்கு,*
*நீர்வேலி.*

தகவல்:
சு.நாகேந்திரராசா
(மகன்)

(76090)

## வேலுப்பிள்ளை - புஷ்பராசா (பவா)

புலோலி தெற்கைச் சேர்ந்தவரும் சவூதியில் பணிபுரிந்தவருமான வேலுப்பிள்ளை புஷ்பராசா கடந்த 02-05-2000 ஆம் திகதி கொழும்பில் காலமானார்.

இவர் வேலுப்பிள்ளை - பாக்கியம் தம்பதிகளின் புதல்வனும், விஜயகலாவின் அன்புக்கணவரும், பிரசன்னா, இலக்கியா ஆகியோரின் பாசமிகு தந்தையும், புஸ்பலீலா, விவேகானந்தம், புஸ்பராணி, புஷ்பரஜனி (கனடா) புஷ்பவதனா (கனடா) ஆகியோரது அருமைச் சகோதரரும், சி.நவரத்தினம் (ஓய்வு பெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்), காலஞ்சென்ற வி.வசந்தராணி, வே.கமலாகரன் (சவூதி), த.ரவீந்திரன் (கனடா), க.சுரேஷ் (கனடா) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 04-05-2000 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புலோலி தெற்கு,*
*புலோலி.*

தகவல்
க.வேலுப்பிள்ளை (தந்தை)

(C/12074)

# புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் இலங்கைக்கு உதவக் கூடாது

## ஹல்கத் கூறுகிறார்

புதுடில்லி,மே8

விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் இலங்கை இராணுவத்துக்கு இந்தியா எந்தவித உதவியும் செய்யக்கூடாது.

இலங்கையில் இந்திய அமைதிப்படை நிலைகொண்டிருந்த காலத்தில் அதன் கட்டளைத் தளபதியாக இருந்த லெப்டினன்ட் ஜெனரல் ஹல்கத் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் இருந்து வெளிவரும் "ரைம்ஸ் ஒவ் இந்தியா" என்ற பத்திரிகைக்கு வழங்கிய பேட்டி ஒன்றிலேயே ஜெனரல் ஹல்கத் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்திய அமைதிப்படையுடன் போரிட இலங்கை அரசாங்கம் விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்களை வழங்கியது. எனவே இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்க்க அந்த நாட்டு அரசாங்கமே நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதனை விடுத்து உள்நாட்டுப் பிரச்சினையைத் தீர்க்க வேறொரு நாட்டின் உதவியை நாடுவது சிறந்ததல்ல -

இப்படி அவர் மேலும் தெரிவித்தார்.

(இ-7)

# ஆசிய அபிவிருத்தி வங்கி தூதுக்குழு வவுனியாவில்

வவுனியா,மே8

ஆசிய அபிவிருத்தி வங்கியின் தூதுக்குழு ஒன்று நேற்று வவுனியா வந்துள்ளது.

இருநாள் விஜயம் மேற்கொண்டுள்ள இந்தக் குழுவுடன் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் ரி.லங்காநேசனும் வவுனியா வந்துள்ளார்.

இடம்பெயர்ந்த மக்கள் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ள செல்லப்பர் மருதங்குளம், ஆசிகுளம், சிதம்பர குளம் ஆகிய கிராமங்களுக்குக் குழுவினர் சென்றனர்.

வவுனியா செயலகத்தில் இன்று இடம்பெறும் கூட்டம் ஒன்றில் குழுவினர் பங்குபற்றுவதுடன் அகதி முகாம்களுக்கு இன்று செல்வர்.

### யுத்த நிலையில் நாட்டை வைத்திருக்கும் பிரகடனம்,செய்தித்தணிக்கை:

# அரசு தனது முடிவுகளை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கோரிக்கை

நாடு முழுவதையும் யுத்த நிலையில் வைத்திருப்பதற்கு எடுக்கப்பட்ட முடிவையும், யுத்தச் செய்திகளை வெளியிடுவதில் உள்ள தணிக்கையையும் அரசாங்கம் உடனடியாக மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

கருத்துக்களை வெளியிடுவதற்கான சுதந்திரத்தைப் பாதுகாக்கும் ஜனநாயக அமைப்பு இப்படிக் கோரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து அந்த அமைப்பின் தலைவர் ஹூஸன் ராஜகருணநாயக்க அறிக்கை ஒன்றையும் விடுத்துள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இராணுவ நடவடிக்கைகள் மற்றும் யுத்தச் செய்திகள் சம்பந்தமாக முன்னர் கடைப்பிடிக்கப்பட்டு வந்த செய்தித் தணிக்கை தற்போது மேலும் தீவிரமாக்கப்பட்டுள்ளது.

இதனால் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் பற்றிய செய்திகள் மற்றும் அரச நடவடிக்கைகள் சம்பந்தமான விமர்சனங்கள் ஆகியவற்றை வெளியிடுவது தணிக்கைக்குள்ளடக்கப்பட்டுள்ளது.

தேசிய பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு இராணுவ நடவடிக்கைகள் சம்பந்தமான செய்திகளை தணிக்கைக்கு உட்படுத்துவதை நியாயமானதாக ஏற்றுக் கொள்ளலாம். குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் சம்பந்தமான சர்வதேச உடன்படிக்கைகளிலும் இது அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

எனினும் தற்போது தீவிரப்படுத்தப்பட்டுள்ள இந்தச் செய்தித் தணிக்கையை தவறான முறையில் பயன்படுத்தக்கூடிய சாத்தியக் கூறுகள் அதிகம் உள்ளன.

அது மட்டுமன்றி யுத்தம் சம்பந்தமான உண்மையான விவரங்களை வெளியிடுவதும், மக்களுடன் தொடர்புபட்ட அன்றாட நடவடிக்கைகள் சம்பந்தமான செய்திகளை வெளியிடுவதும் தற்பேரது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# கொழும்பில் அரச அதிபர் மாநாடு

கொழும்பு,மே8

யுத்த சூழலில் அரசாங்க அதிபர்கள் ஒவ்வொருவரும் ஆற்ற வேண்டிய கடமைகள் குறித்து விளக்குவதற்காக பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க எதிர்வரும் சனியன்று கொழும்பில் அரச அதிபர்களுக்கான விசேட மாநாடு ஒன்றைக் 'கூட்டுகிறார்.

வடக்கு - கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த அரசாங்க அதிபர்களுக்கும் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

(இ-7)

# இலங்கைக்கு படை அனுப்பவேண்டாம் என்று கோரி சிதம்பரத்தில் ஆர்ப்பாட்டம்

## 200 பேர் கைது செய்யப்பட்டனர்

சென்னை,மே8

- இலங்கைக்கு இந்தியப் படையை அனுப்பவேண்டாம் என்ற கோரிக்கையை வலியுறுத்தி சிதம்பரத்தில் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்திய இருநூறு பேர் கைது செய்யப்பட்டனர் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

சிதம்பரத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட ஈழஆதரவு மாநாட்டுக்கு பொலீஸார் தடை விதித்ததை அடுத்து பழ.நெடுமாறன் தலைமையில் இவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர் என்றும் -

அச்சமயமே இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

(முன்னர் வந்த செய்திகள் 3ஆம் பக்கத்தில்).

(இ-3-4)

# அரசாங்கம் விடுத்துள்ள யுத்தப் பிரகடனம் தமிழரின் அடிப்படை உரிமைகளுக்கு ஆப்பு

## மட்டக்களப்பு மாவட்ட எம்.பி. குற்றச்சாட்டு

மட்டக்களப்பு,மே8

நாடு முழுவதிலும் யுத்த நிலைமையை அமுல்படுத்துவதற்காக அரசாங்கம் விடுத்த யுத்தப் பிரகடனத்தில் உள்ள சகல அம்சங்களும் வடக்கு - கிழக்கு தமிழர்களின் அடிப்படை உரிமைகளுக்கு ஆப்பு வைப்பதாகவே அமைந்துள்ளன என்று மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசெப் பரராஜசிங்கம் குற்றம் சுமத்தியுள்ளார்.

வடக்கு - கிழக்கிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் வசிக்கும் தமிழ் மக்கள் பயங்கரவாதத் தடைச்சட்டம், அவசரகாலச் சட்டம் போன்றவற்றினால் கடந்த 25 வருடங்களாகப் பல்வேறு அடக்குமுறைகளுக்கும் துன்ப துயரங்களுக்கும் உட்பட்டு வந்துள்ளனர்.

தற்போதைய பிரகடனத்தில் உள்ள 70.1 பிரிவு தற்சமயம் அரசாங்க அதிபர்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் சில கடமைகளையும் அதிகாரங்களையும் பாதுகாப்பு இணைப்பதிகாரிகளுக்கு பராதீனப்படுத்துகிறது.

இது வடக்கு - கிழக்கில் எச்சசொச்சமாகவுள்ள சிவில் நிர்வாகக் கடமைகளையும் பறிப்பதாக அமைந்து விடுகின்றது.

நீதித்துறையின் அதிகாரங்கள் பொலீஸ் அல்லது படைத்தரப்பிடம் கையளிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இந்தநிலை மாறி சுமுக நிலை ஒன்று இந்த நாட்டிலே உருவாக வேண்டும்.

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# திருடிய பொருள்களுடன் இளைஞர்கள் ஊர்வலம்

## கரணவாய் வடக்கில் சம்பவம்

நெல்லியடி,மே8

பட்டப்பகலில் வீட்டில் தனிமையிலிருந்த வயோதிபரை மிரட்டி அங்கிருந்து பெறுமதிமிக்க பொருள்களை திருடிய இரு இளைஞர்கள் அயலவர்களினால் மடக்கிப் பிடிக்கப்பட்டனர். அவர்கள் ஊர்வலமாக அழைத்துச்செல்லப்பட்டு பொலீஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

கடந்த வாரம் வடமராட்சியிலுள்ள கரணவாய் வடக்கில் இந்த சம்பவம் இடம்பெற்றது.

ரேடியோ, சுவர்மணிக்கூடு, உட்பட குசினிப்பொருள்களை திருடிய இவ்விரு இளைஞர்களையும் அயலவர்கள் மடக்கிப்பிடித்து கரணவாய் வடக்கு கிராமசேவை அலுவலர் கே.கே.மகேந்திரராஜாவிடம் ஒப்படைத்தனர்.

பின்னர் இரு இளைஞர்களும், திருடிய பொருள்களை தலையில் சுமந்தபடி ஊர்வலமாகக் கொண்டு செல்லப்பட்டு வல்வெட்டித்துறை பொலீஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

(இ-109)

எமில் திரையில்
கடற்கரை வீதி, குருநகர்.
லக்ஷனின் வெளியீடு
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
சரத்குமார். விஜயசாந்தி.
சரன்ராஜ்
நடிப்பில்
முதலமைச்சர் ஜெயந்தி
நேரம்: 2.30 மணி
(76086)

# வவுனியா அகதி முகாமில் பெண் கைது தற்கொலைக்குண்டுதாரியாம்!

கொழும்பு,மே8

தற்கொலைக்குண்டுதாரி என சந்தேகிக்கப்படும் ஒரு பெண்ணை வவுனியாவில் உள்ள அகதிமுகாமில் வைத்துக் கைது செய்துள்ளதாக கொழும்பு மாவட்ட பிரதிப் பொலீஸ் அதிபர் போதி லியனகே தெரிவித்துள்ளார்.

தகவல் ஒன்றின் அடிப்படையில் கொழும்பில் இருந்து சென்ற விசேட பொலீஸ் குழு பிரஸ்தாப பெண்ணைக் கைதுசெய்து விசாரணைக்காக கொழும்பு கொண்டுவந்துள்ளதாக அவர் மேலும் கூறினார்.

ராஜகிரியவில் கடந்த மார்ச் பத்தாம் திகதி இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்துடன் இந்தப் பெண்ணுக்கு தொடர்பு உள்ளது என்று பொலீஸார் தெரிவித்தனர்.

இந்தப் பெண் இந்தவாரம் கொழும்பு வந்து முக்கிய தலைவர் ஒருவரைக் கொலை செய்ய திட்டமிட்டிருந்தார் என்றும் பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ-3)

### இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர், முப்படைத் தளபதிகள் ஆகியோருடன் கலந்துரையாடுவார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் பேச்சு நடத்தவிருக்கும் இவர் அநுராதபுரம், கண்டி, தியத்தலாவ இராணுவமுகாம்களுக்கும் செல்வார்.

தமது பாரியார் மற்றும் சிரேஷ்ட படை அதிகாரிகளுடன் இவர் வந்துள்ளார்.

எதிர்வரும் வெள்ளி இவர் தாயகம் புறப்படுவார். (இ-க-3-4-7)

### சிக்குண்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வந்துள்ளதாக கொழும்பில் அரச அதிகாரிகள் தெரிவித்தனர். ,

எனினும் எந்த வகையான உதவியை வழங்க ரஷ்யா முன்வந்துள்ளது என்ற விவரத்தை அரசு வெளியிடவில்லை.

ஓரிரு தினங்களில் ரஷ்யாவில் இருந்து குழு ஒன்று கொழும்புக்கு வரவிருக்கின்றது. (இ-க-3-4)

# இலங்கைக்கு ஆயுத உதவி வழங்க இஸ்ரேல் இணக்கம்

கொழும்பு,மே8

இஸ்ரேல் அரசுடன் ராஜதந்திர உறவுகளை இலங்கை அரசு புதுப்பித்ததைத் தொடர்ந்து - இலங்கைக்கு ஆயுத உதவிகளை வழங்க அந்த நாடு முன்வந்துள்ளது என்று, கொழும்பில் இருந்து வெளிவரும் "சண்டே ரைம்ஸ்" தகவல் வெளியிட்டுள்ளது.

விடுதலைப்புலிகளுக்கு எதிரான யுத்தத்தைத் தீவிரமாக்கும் நோக்குடன் இஸ்ரேலுடன் இலங்கை அரசு உறவுகளை மீண்டும் புதுப்பித்துள்ளது என்றும் -

இதனைத்தொடர்ந்து இஸ்ரேல் ஆயுத மற்றும் படைகளுக்கான பயிற்சி ஆகிய உதவிகளை வழங்க முன்வந்துள்ளது என்றும் - அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்தது.

(இ-3-4)

### இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனிதாபிமான உதவிகளை வழங்க ராஜதந்திர மட்டத்தில் இந்தியா நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் - அவர் தெரிவித்தார்.

இலங்கையில் ஐக்கியம், ஒற்றுமைப்பாடு ஆகியவற்றுக்கு உட்பட்டதாக தீர்வு ஏற்படவேண்டும் என்பதே இந்தியாவின் விருப்பம் என்றும் அவர் கூறினார். (இ-3-4)

## 4 தமிழர் கைது

மன்னார்,மே8

மன்னார்-வங்காலைப்பாடு கடற்பரப்பில் வைத்து 4 தமிழர்கள் கடந்த வெள்ளி இரவு விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் அனைவரும் மன்னார் மாவட்டத்தின் இராணுவக்கட்டுப்பாட்டுப்பகுதியில் இருந்து இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதிக்குச் சென்றவர்கள் எனவும் - விசேட அதிரடிப்படையினர் அறிவித்துள்ளனர்.

மேற்படி நான்கு பேரும் மன்னார் மாவட்ட நீதிவான் எம்.இளஞ்செழியன் முன் பொலீஸாரால் ஆஜர் செய்யப்பட்டபோது அவர்களை பிணையில் செல்ல அனுமதித்தார்.

Institute of Informatics Studies (I I S)
Jaffna, Sri Lanka
T.P. No. 021 2831
E-mail: iis@sltnet.lk
NCCA வகுப்புகள்
மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கான வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
வாரஇறுதிவகுப்புகள் : 14-05-2000
வாரநாள்வகுப்புகள் : 16-05-2000 } 10.00 am
National Certificate in Computer Application பரீட்சைக்குரிய Basic Level, Intermediate Level ஆகிய இரண்டு பிரிவுகளுக்கான விரிவுரைகள் ஆரம்பம்.
ஏராளமான மாணவர்கள் மேற்படி பரீட்சைக்கு ஆர்வத்துடன் விண்ணப்பித்திருப்பதால் மாணவர்களின் வசதி கருதி மிகக் குறைந்த கட்டணத்தில் பயிற்சியை மேற்கொள்ளும் வசதி.
NCCA பரீட்சைக்கு எந்த நிலையத்தில் விண்ணப்பித்திருந்தாலும் அவர்களும் எமது நிறுவனத்தில் நடத்தப்பட இருக்கும் பயிற்சியில் இணைந்து கொள்ளலாம்.
மேற்படி பயிற்சி நெறி வடமராட்சி மாணவர்களின் நலன் கருதி எமது நெல்லியடி கிளை நிறுவனத்திலும் நடத்தப்படும்.
மாணவர்கள் தமது பதிவை 7-5-2000 முதல் மேற்கொள்ளலாம்
100, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
இயக்குனர்
IIS

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08-05-2000இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.